உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41] துந்துபி ஆண்டு ஆடித்திங்கள் 10-8-82 [இதழ் 9



சித்தி புத்தி விநாயகர்

22 — 8 — 82 ஞாயிற்றுக்கிழமை "விநாயகசதுர்த்தி"

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[☆]—

தேவே மதுரைநகர்ச்
சிற்பரனே எவ்வுயிர்க்குங்
கோவே எனையாளுங்
கோவேஎன் — நாவே
உனைத்துதிக்கச் சிந்தை
உனைநினைக்க என்றுங்
கனத்தில்உனைவணங்கக்காண்.
—சொக்கநாத வெண்பா. 91.

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ
குருபாதம்

"ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41 || 10–8–82 || இதழ் 9

உட்பொருள்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 23
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 25
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 250

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 41 | துந்துபி - ஆடி - 10—8—82 | இதழ் 9

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

சுதந்திரம் நிலைக்கச் — சோறும் கல்வியும் வேண்டும்

எதிர்பார்த்தன இரண்டு :

அமரகவி பாரதியாரின் பிறந்தநாள் - நூற்றாண்டு இது. தமிழ்நாடு அரசு ஆண்டுமுழுதும் அவருக்குப் பெருவிழாக் காண்கிறது. பாரதியார்கண்ட கனவுகள் பல. அவற்றுள் சில மெல்ல மெல்ல நிறைவேறிவருவது நமக்கு மகிழ்ச்சிதருகிறது. கஞ்சி குடிப்பதற்கும் இயலாத வறியவர்களைக்கண்டு வெதும்பியவர் பாரதி. அதைவிட, நமக்கு ஏன் கஞ்சி கிடைக்கவில்லை என்று அதன் காரணங்களை ஆராயத்தெரியாத நிலை கண்டு கொதித்தவர் அவர். 'மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனி இல்லை' எனப் பிரகடனப்படுத்தினர். தனி

ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்ற அவரது ஆவேசம் மனிதாபிமானியாக அவரை உயர்த்தியது. விடுதலைபெற்ற நாட்டில் அவர் எதிர்பார்த்தன இரண்டு.

“ வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும் ”

உடலுக்குச் சோறு; உணர்வுக்குக் கல்வி! இந்த இரண்டுக்கும் நாட்டில் உத்தரவாதம் வேண்டுமென்பது அவர் கனவு. தமிழ் நாடு அரசின் புதிய சத்துணவுத்திட்டத்தால், பாரதியின் இந்த இரண்டு ஆசைகளும் நிறைவேறியிருப்பது பெரிதும் பாராட்டத் தக்கது.

மனிதாபிமானத் திட்டம் :

பாரத் நாட்டிலேயே முதன்முதலில் ரூ 120 கோடியை ஆண்டொன்றுக்குச் செலவிட்டு, வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழும் 2முதல் 10 வயதுக்குட்பட்ட 60லட்சம் குழந்தைகளுக்கு மதிய சத்துணவு வழங்கும் இத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. இத்திட்டத்தை மத்திய அரசும், பிற மாநிலங்களும், பெருவாரியான பொதுமக்களும் வேற்றுமை உணர்வுகளை மறந்து வரவேற்றிருப்பது மகிழ்ச்சிதருகிறது. தமது இளமைக் கால வறுமையின் கொடுமையை நினைவுகூர்ந்த தமிழ்நாடு முதல்அமைச்சர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் நினைவில் பழுத்த இத்திட்டம் மனிதாபிமானம் மிக்கது; மகத்தானது, வேலை வாய்ப்பும், பள்ளிகளில் குழந்தைகளின் வருகை கூடியிருப்பதும் இத்திட்டம் விளைத்த உடனடி நன்மைகள். அரசு எல்லோருடைய ஆதரவினையும் திறந்த மனத்தோடு வேண்டியிருப்பதும், பலரும் இத்திட்டத்திற்குப் பேராதரவு தருவதும் இதன் சிறப்பிற்கு அணிசேர்க்கின்றன.

அறிஞர் மதிப்பீடு :

முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட மதிய உணவுத் திட்டத்தின் வளர்ந்த

நிலையாகவே இதனைக் கருதலாம். ஏழைகளுக்கு வயிற்றுச்சோறு நல்கும் திட்டம்போல் தோன்றினாலும், மிகப்பெரிய சமூக மாற்றத்திற்கு இத்திட்டம் வித்திடுகிறது என்ற முதலமைச்சரின் கருத்து ஆழ்ந்த சிந்தனைக்குரியது. ஏழ்மையால் உருவாகும் தவறுகள் அகலவும், சிறந்த பல்துறை அறிஞர்கள் அங்கிருந்து உருவாகவும் இத்திட்டம் மறைமுகமாக வழிகோலும் என்றே அறிஞர்கள் மதிப்பிட்டுள்ளனர். இத்திட்டத்தால் நலத்திட்டங்கள் பாதிக்கப்படும் என்பது உண்மையே: என்றாலும் பல்வேறு முறைகளால் இதனை நிறைவு செய்ய அரசு சிந்தித்து வருவதாகத் தெரிகிறது. எங்ஙனமாயினும் இது சிறந்த மனிதாபிமானச் செயல் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க இயலாது.

அன்று சமயம் இன்று அரசு !

அரசின் இன்றைய பணிகளை முன்பெல்லாம் சமயமும் – சமய நிலையங்களுமே இயற்றி வந்துள்ளன. இந்துமதத்தில் – குறிப்பாகச் சைவத்தில் அன்னதானம் பேரிடம் பெற்றிருந்தது. திருக்கோயில்களில் நைவேத்தியங்கள் நிவேதிக்கப் பெற்று ஏழைகளுக்கே வழங்கப்பெற்றன. யாத்திரிகர்களுக்கு உணவு நல்கப்பட்டது. விழாநாட்களில் கஞ்சி வார்த்தல் வழக்கில் இன்றும் உள்ளது. அன்ன சத்திரங்கள் நாடெங்கும் இயங்கின அப்பரடிகளும், திருஞானசம்பந்தரும் பஞ்ச காலத்திலும் சொல்லால் சாற்றிச் சோறிட்டுத் துயர்கூர் வறுமை தொலைத் திட்டதாகப் பெரியபுராணம் குறிக்கிறது. சோறு மணக்கும் மடங்களெல்லாம் அன்னதானத்தில் முன்னின்றன. மாகேஸ்வர பூஜை என்றபெயரால் மக்களுக்கு உணவு வழங்கப்படும் முறை இன்றும் திருமடங்களில் இருந்து வருகிறது. தமிழ் மக்கள் தங்கள் இல்லத்து இன்ப – துன்ப நிகழ்ச்சிகளில் எல்லாம் பசித் தார்க்குச் சோறிட்டனர். இத்தகு பெரிய மனிதாபிமானம் மிக்க நமது சமயத்தின் சோறிடும் அறப்பணியைக் காலநிலைக்கு ஏற்ப அரசு ஏற்றிருப்பது பாராட்டத்தக்கது.

பசிப்பிணி அறுக :

கடவுள் மறுப்பினைப் பேசிய பௌத்தமும், ஜைனமும்கூட பசிக்குச் சோறிடுவதைப் பெரிதாகப் பேசின. மணிமேகலை

அமுதசுரபி துணையோடு 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக' என வாழ்ந்த வாழ்வைக் காப்பியம் பேசிக்காட்டுகின்றது. ஜைனம் தயாமூலதன்மம் என இதற்கு உடன்பட்டுச் சிறந்தது. வைணவ ஆழ்வார்களில் ஒருவராகிய திருமங்கை மன்னன் நாளும் ஆயிரவர்க்கு உணவு வழங்கி வறுமையுற்றமையை வரலாற்ருல் அறிகிருேம். எனவே, இந்த நாட்டின் சமயங்களின் உயிர்க்கொள்கைகளில் ஒன்ருகிய சோறிடும் தருமம் மீண்டும் புத்ய நோக்கில் மலர்ந்திருப்பது மகிழ்ச்சி தருகிறது.

நல்ல திட்டம் நமது பாராட்டு :

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் மனித நேயத்தோடு செயல்படுவதே பெரிய உதவியாகக் கருதப்படும். அரசும், பொதுமக்களும் இவ்வகையில் உரிய கண்காணிப்பினை மேற்கொள்வது இன்றியமையாதது. குழந்தைகளுக்கு அரசு உணவு நல்குவது ஒரு இடைக்கால ஏற்பாடாகவே இருக்கும் என்று நம்புகிருேம். உண்மையானதீர்வுவேறு. பெற்ருேர்களைத் தம் குழந்தைகளுக்குத் தாமே உணவிடும் வலிமையை உண்டாக்குவதே உண்மையான தீர்வாகும். சமயங்களாலும் தனி மனிதர்களாலும் பல நூறு ஆண்டுகளாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு இடையே தடைபட்டிருந்த இந்த நல்ல திட்டத்தை மீண்டும் புதுக்கிய தமிழ் நாடு அரசுக்கும், தமிழக முதல்வர்க்கும் நமது பாராட்டுகள். அனைவரும் வேறுபாட்டு உணர்வுகளைத் தவிர்த்து இத்திட்டத்தின் வெற்றிக்குப் பாடுபடுவார்கள் என்றே நம்புகின்ருேம்.

வறுமை அகல்க ! வளர்க கல்வி !

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வைத்தீசுவரன்கோயிலில் நடைபெற்ற

சஞ்சய்காந்தி நினைவு கண் சிகிச்சை முகாமில்

வழங்கியருளிய

ஆசியுரை

10—2—1982

" ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
 ஆதியை அமரர் தொழு தேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
 சிந்திப்பாரவர் சிந்தை யுளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
 என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
 காணக் கண் அடி யேன்பெற்ற வாறே "

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை :

'எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்' என்பது ஆன்றோர் வாக்கு. "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதும் காட்டியதே" என்பது தஞ்சைவாணன்கோவை. சமஸ்கிருத மொழியிலும், "ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிரஸ்ப்ரதாநம், ஸர்வேந்திரி யாணும் நயநம் ப்ரதாநம்" என்று இக்கருத்தே கூறப்பெற்றுள் ளது. மக்களின் உடம்பிலுள்ள கருவிகளை இரண்டுவகையாகப் பிரிப்பர். ஒன்று அறிவுக்கருவி; மற்றொன்று தொழிற்கருவி. அறிவுக்கருவிகள் ஐந்து; தொழிற்கருவிகள் ஐந்து. ஊற்றுணர் வுள்ள உடம்பு; சுவையுணர்வுள்ள நாக்கு; ஒளியுணர்வுள்ள கண்; நாற்றவுணர்வுள்ள மூக்கு; ஒலியுணர்வுள்ள காது எனும் அறிவுக்கருவிகளாகிய ஐம்பொறிகளும், அவற்றை உணர்ந்து செயற்படுத்தும் மூளையும் தலையில் இருக்கும் காரணம் பற்றியே "எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்" என்றனர்.

இவ்வைம்பொறிகளுள்ளும் கண் சிறந்த இடம் வகிக்கிறது. காரணம் மற்றைய பொறிகள் தன்னிடம் வருவனவற்றை அறிந்து மூளைக்கு உணர்த்துவன. ஆனல் கண் மட்டுமே தொலைவிலுள்ள பொருளையும் சென்றறிந்து அதனை மூளைக்கு உணர்த்தும் திறனுடையது. கண்ணைத்தவிர மற்றையபொறிகள் நின்று பற்றுவன; கண்மட்டுமே சென்றுபற்றும் சிறப்புடையது. இச்சிறப்புக் கருதியே, "கண்ணிற்சிறந்த உறுப்பில்லை யாவதும் காட்டியதே!" என்று தஞ்சைவாணன்கோவையின் ஆசிரியர் பொய்யாமொழிப் புலவர் கூறினர்.

மன்னனே மக்களின் கண் :

சேக்கிழாரும் மன்னனின் இலக்கணம் கூறவந்த இடத்து,

"மண்ணில் வாழ்தரும் மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்"

என்று மொழிகின்றார். மன்னனுவான் தன் நாட்டில் வாழும் உயிர்கட்கெல்லாம் உயிராக வாழ்பவன். அதோடு மட்டு மின்றிக் கண்ணாகவும்வாழ்பவன். தன்னிடம் குறைவேண்டியும் முறைவேண்டியும் வருவோர்க்கு ஆவன செய்வதோடல்லாது தானே பல இடங்களுக்கும் சென்று குறைகளையும் முறைகளை யும் கண்டும் கேட்டும் அறிந்து அதற்குத்தக தீர்வுசெய்யும் கடப்பாடுடையவன் என்பது கருத்தாகும். உயிர் நின்று பற்றுவது; கண்சென்றுபற்றுவது. மன்னன் உயிராக, இருந்துழி இருந்து ஒற்றர்வழி அறிந்து மூளையைப்போல் நின்றும்நீதி வழங்கவேண்டும். கண்ணாக இருந்து சென்றும் நீதி வழங்க வேண்டும்' எனும் உட்கருத்தில்தான் சேக்கிழார்பெருமான், 'கணணும் ஆவியும் ஆம்பெருங்காவலான்' என்றருளிச் செய் கின்றார்.

இன்பத் துன்பத்தைக் காட்டுவது கண் :

மேலும் கண்ணிற்குப் பல சிறப்புக்கள் உண்டு. அறிதற் கருவியாக விளங்கும் கண், அறிவுக்கருவிகளிலும், தொழிற் கருவிகளாகிய கை, கால், வாக்கு, எருவாய், கருவாய் எனும் உடலுறுப்புக்களிலும், ஏதாவது நன்றோ தீதோ நிகழுமாயின் அதனைப் புலப்படுத்துகின்ற நிலையில் இன்பத்துன்பக் கண்ணீர் வடிப்பதும் அக்கண்ணின் சிறப்பாகும். மனிதனின் உள்ளத் திற்குள் நிகழும் மகிழ்ச்சியையும் நெகிழ்ச்சியையும் வெளிப் படுத்தும் கருவியாக இலங்கும் சிறப்புடையது கண். ஒரு

செயலை ஏற்று இசைவு தருவதும், புறக்கணிப்பதும் கண்ணின் புலப்பாட்டிலேயே அறிந்துகொள்ள இயலும். அத்தகைய சிறப்புடை கண், திருடனைக் காட்டிக் கொடுக்கவும், ஒழுக்கம் இல்லாதவனை உலகுக்கு உணர்த்தவும் உரிய கருவியாக விளங்குகிறது.

கற்பினைக் காட்டுவது கண் :

இதனால்தான் சீதாப்பிராட்டியின் கற்புத்திறத்தை இராம பிரானிடம் கூறவந்த அனுமன், "கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்" என்று விளக்குகின்றான். சீதை உயிரோடுதான் இருக்கிறார் என்பதைப் பிறர்கூறக் கேட்டு வரவில்லை; நானே என் கண்களால் கண்டு வந்தேன் என்று அனுமன் கூறுகிறான் என்பதாகப் பொருள் கூறலாம். ஆனால் அம்மையார் கற்போடுதான் இருக்கிறார் என்பதை எங்ஙனம் கூறமுடியும் என்பதற்கு விளக்கம் கூறவே இத்தொடருக்கு இன்னும் ஆழமாகச் சிந்தித்துப் பொருள் விளக்கம் காணுதல் அவசியமாகிறது. 'கண்டனன்' என்றாலேயே கண்களால்தான் என்பது தானே விளங்கும். பின்னும் 'கண்களால்' என்றுகூற வேண்டிய அவசியமில்லை. எனவே முன்னே உள்ள 'கண்டனன்' என்பதற்கு அனுமன் தான் தன்கண்களால் பார்த்தேன் என்ற பொருளும், பின்னே உள்ள 'கண்களால் எனும் சொல்லிற்குச் சீதையின் கண்களால் அவர் கற்பினுக் கணியாக இருப்பதைப் பார்த்தேன் என்னும் பொருளும் கொள்ளுதல் ஒருவகை. மேலும் அனுமன் கண்களால் சீதாபிராட்டியைக் கண்டனன் என்றும், சீதாபிராட்டின் கண்களால் அவரது கற்பு நெறி பிறழாது அணியாகத் திகழ்வதைக் கண்டனன் என்றும் கொள்ளுதல் சிறப்பாகும்.

எனவே கண்ணனது மற்ற பொருள்களை அறிந்து மூளைக்கு உணர்த்துவதோடல்லாது கண்களையுடைய மனிதனின் உள்ள உணர்ச்சிகளைச் சமுதாயத்திற்கு உணர்த்தும் உயர்கருவியாகவும் விளங்குகிறது.

காக்கவேண்டிய சிறப்பினது கண் :

இத்தகைய சிறப்புக்கள் பலவுடைய கண்ணைக் காப்பதற்கு இறைவனே தக்க பாதுகாப்புக் கொடுத்திருக்கின்றார். கண்ணை இமை காப்பது போல என்று உலகோர் கூறுவதும் ஈண்டு நினைவுகூரத்தக்கது. காக்கும் இமையைக் கொடுத்துக் காத்துக் கொள் என்று ஆண்டவனே அறிவுறுத்தியுள்ள கண்ணை இன்று பலர் பல காரணங்களினால் கெடுத்துக்கொள்கின்றார்கள்.

கண்கெடுவதற்குரிய காரணங்கள் பலவாகும். பொதுவாக மனித வாழ்வில் ஒழுங்கு நெறிமுறைகள் கெடுமானல் அவை கண்களைப் பாதிக்கும். குறிப்பாக ஒழுக்கக் கேட்டினலும், பொய் சொல்வதனலும், கோபப்படுவதனலும், திரைப்படம், தொலைக்காட்சிகளைப் பார்ப்பதனலும் கண் கெடும். மற்ற காரணங்கள் தெளிவாக விளங்கினலும் பொய் சொல்வதனல் கண் பாதிக்கும் என்பது பலருக்குப்புரிவதில்லை பொய் சொல்கிறபோது அவனது மனம் அவனை உறுத்துகிறது. அதனல் உடம்பிலுள்ள நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. இவ்வகையில் கண்கெடுகிறது.

சுந்தரர் வாழ்வில் கண் :

பொய்சாட்சி சொன்னவர்களுக்கும் கண்தெரியாமல் போய் விடும். ஏனெனில் 'சாட்சி' என்றுலேயே கண்ணல் கண்டதைக் கூறுதல் என்பது பொருளாகும். 'சட்சு' எனும் சொல்லுக்குக் கண் என்பது பொருளாகும். அதன் அடிப்படையில்வந்ததே 'சாட்சி' எனும் சொல். ஆதலின் சாட்சி சொல்லும் பொழுது தன் கண்ணல் காணுத ஒன்றைக் கூறுவானேயானல் அதுவே அவனது மனத்தை உறுத்திப் பின்னே தண்டனைக்குரியதாகிக் கண்களைப் பாதிக்கும். சபதம் பொய்த்தாலும் கண்கள் கெடும் என்பதற்கு நம் ஆசாரிய மூர்த்தியாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள்வரலாற்றை இவ்வகையில் எடுத்துக்கொள்ளலாம் இது தவறுடையது எனினும் வாழ்வியல் நெறிமுறைகளை விளங்கிக் கொள்வதற்கும் கடவுளின் நடுநிலைத் தன்மையைப் புரிந்து கொள்வதற்கும் பயன்படும் என்ற வகையில் அடக்கத்தோடும் அச்சத்தோடும் அவ்வரலாற்றைச் சிந்திக்கலாம்.

எறும்புக்குக் கண் இல்லை :

இதுவரை சிந்தித்த கருத்துக்களால் கண் கெடுவதற்குரிய காரணங்களை எண்ணியதுபோல இனிக் கண்ணைப்பாதுகாத்தற் குரிய சில வழிமுறைகளையும் சிந்திப்போம். கண் நன்கு தெரிவதற்குப் பொதுவாகக் கீரை வகைகளைக் குறிப்பாக முருங்கைக்கீரையை உணவில் சேர்த்துக்கொள்ளுதல் நல்லது. மேலும் அறநோக்குப்படிப்பார்த்தால் கண் பார்வையில்லாத ஜீவராசிகளுக்கு உணவு அளித்தலும் கண்ணைக் காப்பாற்றும். உலக உயிர்களில் கண்பார்வையில்லாத உயிர் எறும்பு ஆகும். தொல்காப்பியர் ஓரறிவுயிர், ஈரறிவுயிர் என்பதுபற்றி ஒரு நூற்பாக் கூறுகின்றர்,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே — தாவரம்.
இரண்டறி வதுவே அதனொடு நாவே — கரையான்.
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே — எறும்பு.
நான்கறி வதுவே அவற்றொரு கண்ணே — வண்டு.
ஐயறி வதுவே அவற்றொடு செவியே — விலங்குகள்.
ஆறறி வதுவே அவற்றொடு மனனே — மனிதன்.
நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே".

என்னும் நூற்பாவில் ஆறு அறிவுபற்றிய உயிரினங்களைப் பிரித்துக்கூறுகின்றார். உற்றறியும் அறிவு ஒன்றுமட்டும் உடைய உயிரினங்கள் புல், மரம் போன்றவை. நாவறிவாகிய ஈரறிவும் உடைய உயிரினங்கள் நத்தை, சங்கு என்பன. மூக்கறிவும் சேர்ந்து உடைய மூவறிவுயிர்கள் சிதல், எறும்பு போன்றவை. கண்ணறிவும் சேர்ந்த நிலையிலுள்ள நாலறிவுயிர்கள் நண்டும் வண்டும், செவியுணர் அறிவுடன் சேர்ந்த ஐயறிவுயிர்கள் மாக்களும் விலங்கினங்களும். ஆறறிவாகிய மனனுணர்வுடைய உயிர்கள் மக்கள் ஆவர். இங்ஙனம் பிரித்துக் கூறப்பட்ட வகையில் எறும்பு எனும் உயிருக்கு உற்றறிவு. நாவறிவு, மூக்கறிவு எனும் மூன்றும் உண்டு என்றும் கண்ணறிவு இல்லை என்றும் உணர்ந்துகொள்கின்றோம்.

எறும்பு தின்றால் கண் தெரியும் :

இத்தகைய கண்பார்வை இல்லாத உயிருக்குநொய்முதலிய தானியங்களைப் புற்றில் இடுதலும், வீடுகளின் முன்னர் அரிசி மாக்கோலம் போடுதலும் காரணமாக உணவுதருப அறச் செயல்கள் நாட்டில் தொன்றுதொட்டு நடைபெறுகின்றன அரிசி மாக்கோலம் போடும் நிலையில் இப்பொழுது மாறுதலாகக் கல்லால் ஆன மாவைக்கொண்டு கோலம் போடுகின்றனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். அறத்தின்நோக்கத்திற்கே புறம்பானதாகும்.

இங்ஙனம் எறும்புபோன்ற கண்பார்வை இல்லாதஉயிரினங்கள் உண்ணும்படி உணவை இட்டால் கண்பார்வை நன்கு தெரியும் எனும் பொருளில்தான் உலக வழக்கில் "எறும்பு தின்றால் கண் தெரியும்" என்னும் பழமொழி வழங்கிவருகிறது. ஆனால் இப்பழமொழியின் உண்மைப் பொருள் அறியாத சிலர் உணவுப் பண்டங்களில் எறும்பிருந்தால், "பரவாயில்லை; சாப்பிடுங்கள், கண் தெரியும்" என்று மாற்றிப் பொருள்கூறி வருகின்றனர். இது தவறு, எறும்பு தின்றால் கண் தெரியும்

என்ருல் எறும்பு, நாம்போடும்உணவைத்தின்ருல் நமக்குக்கண் தெரியும் என்று பொருளேதவிர எறும்பையே தின்ருல் தின்பவருக்குக் கண்தெரியும் என்பது பொருளில்லே. பழமொழிகளே வழங்கக் கற்றுக்கொண்ட மக்கள் அவற்றின் உண்மைப் பொருளேயும் புரிந்துகொள்ளுதல் அவசியம்.

வைத்தியநாதரின் வாழ்த்து :

இங்ஙனம் கண் பார்வை நன்கு தெரிவதற்குச் சில நெறிமுறைகளேயும் கண் பார்வை கெடுவதற்குரிய சில காரணங்களேயும் இந்தநேரத்தில் இங்கே சிந்திப்பதற்குக் காரணமாக இருந்தது இந்த "சஞ்சய்காந்தி நினேவு கண் சிகிச்சை முகாம்' ஆகும். பவரோகவைத்தியநாதராக விளங்கும் வைத்தியநாதப் பெருமான் எழுந்தருளி அருள்வழங்கும் இந்த வைத்தீசுவரன் கோயிலில் இந்தக் கண் சிகிச்சை முகாம் நடைபெறுவது அவர் அருள்பெறும் குறிப்பாகவே அமைந்துள்ளது.

இந்த முகாமை மிகவும் சிறப்பாக நடத்தி, நாற்பதுக்கும் மேற்பட்ட மக்களுக்கு கண்சிகிச்சை அளித்துக் கண்ணுடிகளும் வழங்கியிருப்பது பாராட்டுதற்குரியது. இம்முகாமின் இயக்குனர்களேயும் இதனே முன்னின்று நடத்திய பாராளுமன்ற உறுப்பினர் திரு. குடந்தைராமலிங்கம் அவர்களேயும் இம்முகாமிற்கு ஆதரவு நல்கிவரும் திரு. துளசிஐயா வாண்டையார் அவர்களேயும் மற்றும் தஞ்சை மாவட்ட ஆட்சித்தலேவர், உள்ளூர்ப்பிரமுகர்கள், மயிலாடுதுறை கோட்டாட்சியர் முதலானவர்களேயும் கண்ணெளி பெற்றவர்களேயும் பாராட்டி வாழ்த்துகின்ருேம். மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளேப் பொறுத்துத்தான் அவர்களின் நன்மைதீமைகள் அமைகின்றன. அதனுல் எல்லோரும் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ எல்லாமவல்ல செந்தமிழ்ச்சொக்கன் திருவருளேச் சிந்திக்கின்ருேம்.

வாழ்க நல்லறம் !

வளர்க கண்ணெளி !

திருநாட்டியத்தான்குடி தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,
வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

சுந்தரர் அருளிய தேவாரத் திருப்பதிகம் பெற்ற திருத்தலம். சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலங்களில் 118வதுதலமாக எண்ணப்பெறுவது. கோட்புலி நாயனர் திருவவதாரம் செய்த சிறப்புடையது தமிழ்நாடு இந்துஅறநிலையத் துறையினரின் பரிபாலனத்திற்குட்பட்டது.

இத்தலம் தஞ்சைமாவட்டம் மன்னர்குடித் தாலூகாவில் உள்ளது. மாயூரம்-காரைக்குடி இருப்புப்பாதையில் திருவாருருக்குத் தென்பால் மாவூர்ரோடு என்னும் இரயில்நிலயத்தில் இறங்கி மேற்கே 2 கி. மீ. வெள்ளையாற்றின் தென்கரைவழியே சென்றால் இத்தலத்தை அடையலாம். திருவாரூர்-திருத்துறைப் பூண்டி பேருந்துகளில் ஏறி மாவூர் பேருந்துநிலயத்தில் இறங்கியும் இத்தலத்திற்குச் செல்லலாம். மாவூரிலிருந்து வடபாதி மங்கலம் செல்லும் பேருந்துகளில் செல்லலாம்.

தலப்பெருமை:

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய அரியதொருதிருப்பதிகம் இத்தலத்திற்குள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கோட்புலி நாயனர் வரவேற்றுத் தமது கண்ணனையசிங்கடி வனப்பகை என்னும் இருபுதல்வியரைச் சுந்தரருக்குப் பணிப்பெண்களாகத் தர சுந்தரர் அவர்களைத் தமது புதல்வியராக ஏற்றருளிய தலம்.

கோயிலமைப்பு:

கிழக்குநோக்கிய சந்நிதி. கீழைக்கோபுர வாயிலின் முன் (சுந்தரருக்கு) கைகாட்டிய விநாயகர் சந்நிதி மேற்குநோக்கி விளங்குகிறது. ஐந்து நிலைகளுடன் கூடிய அழகிய இராஜ கோபுரம் கோயிலுக்கு அழகு சேர்க்கிறது உட்பிராகாரத்தில் மேற்கேகன்னிமூலை விநாயகர், முருகன், விசுவநாதர், விசாலாக்ஷி கஜலக்ஷ்மி கோயில்கள் உள்ளன கோஷ்டங்களில் தெற்கே தக்ஷிணமூர்த்தி, மேற்கே இலிங்கோற்பவர், வடக்கே பிரமா துர்க்கை உள்ளனர். கிழக்கே கோட்புலி நாயனர் சமயகுரவர் உள்ளனர். முன்மண்டபத்தில் அம்பிகை தெற்குநோக்கி விளங்குகிறார் தலமரம் மாவிலங்கை வடக்குப் பிராகாரத்திலுள்ளது. மகாமண்டபத்தில் நடராசர் மற்றும் உற்சவமூர்த்திகள் உள்ளனர். நாட்டுக்கோட்டை நகரத்தாருள் வெ. தெ. அவர்களின் சிறப்புமிக்க கருங்கல் திருப்பணியைப் பெற்றுள்ளது.

மூர்த்திகள் :

சுவாமி பெயர் அருள்மிகு மாணிக்கவண்ணர். வடமொழியில் ஸ்ரீ இரத்தினபுரீசுவரர் என வழங்கப்பெறுகிறார். நாட்டியத் தான்குடி நம்பி எனவும் ஸ்ரீ கரிநாலேசுவரர் எனவும் பெயர்கள் உள்ளன. அம்பாள் பெயர் அருள்மிகு மலைமங்கை, மலர்மங்கை என்பன. வடமொழியில் ஸ்ரீ மங்களாம்பாள் என வழங்கப் பெறுகிறார். தீர்த்தம் கோயிலின் முன்புறம் – சூரியதீர்த்தம், பின்புறம் - கரிதீர்த்தம். தலமரம் – மாவிலிங்கை.

புராணவரலாறு :

திருநாட்டியத்தான்குடியில் சைவ வேளாளர்குலத்தில் தோன்றியவர் கோட்புலி நாயனார். சோழமன்னரின் சேனாதி பதியாக விளங்கியவர். இவர், தாம் ஊதியமாகப்பெற்ற பொருளைக்கொண்டு சிவாலயங்களுக்குத் திருவமுதுக்கென நெல்லைவாங்கி நெற்கூடுகளில் சேமித்துவைத்து அவ்வப்போது கொடுத்துவரும் திருத்தொண்டைச் செய்துவந்தார். சுந்தரர் காலத்தில் வாழ்ந்த பெருமைக்குரியவராயிருந்தமையால் கோட்புலி நாயனார் சுந்தரர் பெருமைகளை அறிந்து அவரைத் திருநாட்டியத்தான்குடிக்கு எழுந்தருளுமாறு வேண்டினார். அவ்வேண்டுகோளுக்கு இசைந்த சுந்தரர் திருநாட்டியத்தான்குடிக்கு எழுந்தருளினார். கோட்புலியார் சுந்தரரை வரவேற்றுத் தம் திருமாளிகைக்கு அழைத்துச் சென்று திருவமுது செய்வித்தார். தம் மக்களாகிய சிங்கடி வனப்பகை என்ற இருபெண்களையும் அழைத்து வணங்கச்செய்து அவர்களைப் பணிப்பெண்களாக ஏற்றருள வேண்டுமென வேண்டினார். கோட்புலியாரின் அன்பின் திறமறிந்த சுந்தரர் அவர்களைத் தமது புதல்வியர்களாக ஏற்று மடிமீதுஇருத்தி உச்சிமோந்துவேண்டுவன அளித்துமகிழ்ந்தார். பின்னர் திருக்கோயில்சென்று வணங்கிப் 'பூணாணவதோரரவம்' என்ற திருப்பதிகம்பாடிப் பரவினார். இத்திருப்பதிகத்தில் கோட்புலியாரின் பெருவீரச்சிறப்பையும் அவர்புதல்வியரைத் தம் புதல்வியராகக் கொண்டதையும் குறிப்பிட்டருளிப்போற்றினார். 'கூடாமன்னரைக் கூட்டத்து வென்றகொடிறன் கோட்புலி' எனவும், சிங்கடி வனப்பகை ஆகியோரைத்தமது புதல்வியராகவும் தம்மை அவர்களது தந்தையாகவும் கருதியதை 'நாட்டியத் தான்குடி நம்பியை நாளும் மறவாச் சேடார் பூங்குழல் சிங்கடி அப்பன்' எனவும் கூறியருளினார்.

கோட்புலியார் அரசன்கட்டளைப்படி போர்முனைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது. அவர் தம் சுற்றத்தாரை நோக்கி 'இறைவர்க்குச் சேகரித்து வைத்துள்ள இந்நெல்லை யாரும் எடுத்தல்கூடாது திருவிரையாக்கலி என்னும் ஆணை' என்று

கூறிச்சென்றார். சிலநாளில் நாட்டில் கடும்பஞ்சம் ஏற்பட்டது. சுற்றத்தினர் 'நாம் உணவின்றி இறப்பதைவிட இறைவர்க்கு வைத்த இந்நெல்லைக்கொண்டு உயிர் பிழைப்போம், பின்னர்க் குற்றம்தீரக் கொடுத்துவிடுவோம்' என்று நெற்கூட்டைத்திறந்து நெல்லை எடுத்து உண்டு உயிர்வாழ்ந்து வந்தனர்.

போர்முனையில் வெற்றிகொண்டு அரசர்பால் நிதிக்குவை பெற்று மீண்ட கோட்புலியார் நிகழ்ந்ததை அறிந்தார். அவர்களைத் தண்டிக்க எண்ணினார். அனைவரையும் பரிசில்கள் தருவதாகத் தமது திருமாளிகைக்கு அழைத்துவரச் செய்து வாயிலில் காவலனை நிறுத்தி வைத்துச் சிவபெருமானுக்கு உரிய தாக்கி வைத்த அந்நெல்லை உண்ட தந்தை, தாய், உடன்பிறந்தார், மனைவி, ஏவலர் அனைவரையும் வாளால் கொன்று அங்கு எஞ்சிநின்ற ஒருகுடிக்கு ஒருமகனாக விளங்கும் குழந்தையையும் கொல்ல முற்பட்டார். அப்பொழுது வாயிற்காவலன் இக் குழந்தை நெல்லினாலாகிய அன்னத்தை உண்ணவில்லை. இவனைக் கொல்லாது அருள் செய்யும்' என வேண்டினான். கோட்புலியார் 'இக்குழந்தை இந்நெல்லை உண்டவளது முலைப் பாலை உண்டது' என்றுகூறி அதனை எடுத்து மேலேஎறிந்து தமது வாளால் இருதுணியாக விழச்செய்தார்.

அந்நிலையில் சிவபெருமான் அன்பரெதிரே வெளிப்பட்டுத் தோன்றி 'உனது கைவாளால் பிறவிப்பாசம் அறுக்கப்பெற்ற உனது சுற்றத்தவர் வானுலகு பெறுவர். நீ இந்நிலையிலேயே நம்மை அடைவாயாக' என அருள்புரிந்து மறைந்தார். 'கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி' எனச் சுந்தரர் இந்நாயனாரைச்சிறப்பித்துப்பாடியுள்ளார். கோட்புலியார் வரலாற்றை விரிவாகப் பெரியபுராணத்தில் காணலாம்.

குலவுபுகழ் நாட்டியத்தான் குடிவேளாளக்
 கோட்புலியார் குவித்துயர்த்த செந்நெல்கூடு
நிலவணிவார்க் கமைத்து ஆணை நிறுத்திஒன்னார்
 நேர்மலைவார் திருவாணை நினையாதேநெற்
சிலமிடியால் அழித்தபடி அறிந்து வாளால்
 சேர்ந்தபெருங் கிளையோர் உடல்சிதற வீசி
இலகுமொரு குழவியையும் எறிந்து நாதன்
 எண்ணரிய கருணை நிழல் எய்தினரே.

எனப் பெரியபுராணசாரம் இவ்வரலாற்றைத் தொகுத்துக் கூறுகிறது. ஆடிக்கேட்டையில் கோட்புலியாக்கு அருள்புரிந்த ஐதிக விழா நிகழ்கிறது.

இத்தலத்தில் வழங்கும் சுந்தரர்வரலாறு :

சுந்தரர் கோட்புலிநாயனரின் வேண்டுகோளுக்குஇணங்கத் திருநாட்டியத்தான்குடிக்கு எழுந்தருளி நாயனர் திருமனையில் தங்கியிருந்து திருக்கோயிலுக்கு வழிபாடாற்றத் திருக்கோயிலுக்கு வந்தபோது ஈசனையும் அம்மையையும் காணது திகைத்து விநாயகரை வினவினர். விநாயகர் ஈசானத்திசையைக் கையால் காட்டி வாய்பேசாதிருந்தார். சுந்தரர், இது இறைவரின் திருவிளையாடல் போலும் என உணர்ந்து ஈசானத்திசை நோக்கிச் சென்ருர். பெருமானும் பெருமாட்டியும் உழவன் உழத்தியாக நடவுநட்டுக் கொண்டும் இருந்ததைக்கண்டு, நாற்று பறித்துக் கொண்டும், " நட்ட நடாக்குறை நாளை நடலாம், நாளை நடாக் குறை சேறுதங் கிடவே. நட்டது போதும் கரையேறி வாரும், நாட்டியத் தான்குடி நம்பி" என்றுபாட அம்மையப்பர் மறைந்து கோயிலுக்கு எழுந்தருளினர். சுந்தரர் கோயிலுக்கு மீள எழுந்தருளும்போது வாயிலில் பாம்புதடுக்க 'பூணவதோர் அரவங் கண்டஞ்சேன்' என்று தொடங்கிப்பாடி இறைவனைத் தரிசித்து மீண்டார் என்பது இத்தலத்தில் வழங்கும் சுந்தரர் பற்றிய வரலாருகும்.

கரிதீர்த்தம் :

யானை ஒன்று இத்தலத்தில் தீர்த்தமுண்டாக்கி நீராடி இறைவனை வழிபட்டு முத்திபெற்றது. யானை உண்டாக்கிய தீர்த்தம் கரிதீர்த்தம் எனப்படுகிறது. கரிக்கு அருள் செய்ததால் கரிநாலேசுரர் என இறைவன் பெயர் வழங்கப்படுகிறது.

பாகம்பிரித்த வரலாறு :

இரத்தினேந்திர சோழனும் அவன்தம்பியும் தம்தந்தையார் தமக்கு விட்டுச்சென்ற இரத்தினங்களை மதிப்பீடு செய்தற்கு இரத்தின மதிப்பீட்டாளர் ஒருவரை அழைத்துப்பிரித்துக் கொள்ள முற்பட்டனர். இருவரும் ஒருவருக்கொருவர் மதிப்பீடு சரியில்லை என இறைவனிடம் முறையிட்டனர். இறைவன் இரத்தின வியாபாரியாகத் தாமே எழுந்தருளிவந்து பாகம் பிரித்துக்கொடுத்து மறைந்தார். இருவரும் மகிழ்வோடு சென்று இறைவனுக்கும் இறைவிக்கும் இரத்தினபரணங்கள் செய்தளித்து வழிபட்டு இறைவனது எளிவந்த கருணையை வியந்து போற்றித் துதித்தனர்.

திருப்பதிகம் :

இத்தலத்திற்குச் சுந்தரர் அருளிய திருப்பதிகம் ஒன்றும் அப்பர் இத்தலத்தைக் குறிப்பிட்டுப் பாடிய ஒன்று திருத் தாண்டகப் பாடல் உள்ளது.

நவராத்திரி நிர்ணயம்

ஆகமப்பிரவீண

திரு. V. முத்துசாமி குருக்கள், தருமபுரம்.

பாரதநாடு பழம்பெருநாடு ; பாரினிலே விரதங்கட்கும் பண்டிகைகட்கும் தலைசிறந்த நாடாம். நம் செந்தமிழ்நாட்டில் இவ்விரதங்களும் பண்டிகைகளும் சௌரமானம், சாந்திரமானம் என இருவகையாகப் பிரித்துக் கொண்டாடப்படுகின்றன. சௌரமானம் என்பது சூரியனின் சாரங்களைகொண்டுகணிக்கப் படுவது. வருடப்பிறப்பு, அயனங்கள், ருதுக்கள், சித்திரை முதலிய மாதங்கள், சிவராத்திரி முதலியன இவ்வாறு கணிக்கப் படுகின்றன.

சாந்திரமானம் சந்திரனின் சாரத்தைக்கொண்டு தொகுக்கப் படுவது. சைத்ரம், வைசாகம் முதலிய மாதங்கள், வசந்த நவராத்திரி, சரத் நவராத்திரி, தீபாவளி, அமாவாசை, பருவம் முதலியன சாந்திரமானரீதியில் கணிக்கப்படுவனவாம்.

இப்பண்டிகைகளையும், விரதங்களையும் அனுஷ்டிக்க வேண்டியமுறைகள் அனுஷ்டிகளுக்கு உட்பட்டதேயல்லாமல் இந்நாட்களைத் தீர்மானித்துக் கணித்தல் ஜோதிட சாஸ்திரத் திற்கேஉட்பட்டது. ஆகையால் மேற்படிநாட்களைத்தீர்மானிக்க வேண்டியது ஜோதிட சாஸ்திரமும் ஜோதிடர்களுமேயாம்.

இவ்வாண்டு புரட்டாசித்திங்களில் சூரியன் 1 ஆம் நாள் (17—9—82) கன்னியிலும், 31 ஆம் நாள் (17—10—82) துலாத் திலும் பிரவேசிப்பதால் "அதி மாத" தோஷமும் மேற்படி 1 ஆம் நாள் (17—9—82) அன்றும் 30 ஆம் நாள் (16—10—82) அன்றும் அமாவாசை வருகிறபடியால் "மல மாதம்" என்ற தோஷமும். ஆக இருதோஷங்களும் உள்ளன. யாதொருமாதத்தில் சூரியன் இருராசிகளில் பிரவேசிக்கிறதோ அதற்கு அதிமாதம் என்றும், யாதொருமாதத்தில் சூரிய பிரவேசம் ஏற்படவில்லையோ அது 'ஸம்ஸ்பர்சமென்றும்'', எம்மாதத்தில் இரு அமாவாசைகளோ பௌர்ணமிகளோ ஏற்படுகிறதோ அது "மலமாதம்'' என்றும் பௌர்ணமியோ அமாவாசையோ இல்லாதமாதம் "விஷமாதம்'' என்றும் கூறப்படும். இம்மாதங்களில் யாதொரு சுப காரியங் களும், விரதானுஷ்டானங்களும் செய்யத்தக்கவையல்ல என்று காலவிதானம் போன்ற வடமொழி நூல்களும், ஸாரஸ்வத்தியம் போன்ற தமிழ்நூல்களும் கூறுகின்றன. காலவிதானஸ்லோகம்

ஸம்ஸ்பர்ஸாம் ஹஸ்பதீமாஸௌ சுப கர்மஸீ நிந்தி தௌ !
நாம்நா விஷமலௌ தௌது சுபகர்மாணீ வர்ஜயேது ! !

சித்திரை, வைகாசி, புரட்டாசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி இம்மாதங்களில் அதிமாத தோஷம் கிடையாது என்ற காலதர்ச நூலின் பிரகாரம் அதிமாத தோஷம் புரட்டாசி திங்களுக்குக் கிடையாது. தன்னுடைய சுபவர்க்கத்தில் குருவும், உச்ச அல்லது மித்ர ராசியில் சூரியனும் இருந்தால் ஸம்ஸர்ப மாத, அதிமாத, மலமாத தோஷங்கள் கிடையாது என்ற காலவிதானம், காலாதர்சம் முதலிய நூல்களின் பிரகாரம் பார்க்கும் பொழுது கன்னியாராசியில் இருக்கும் சூரியனுக்கு இக்கன்னியா ராசி பகைவீடானபடியாலும், துலாராசியில் இருக்கும் குருவிற்கு இத் துலாராசி பகை வீடானபடியாலும் புரட்டாசித்திங்களுக்கு மலமாத தோஷம் தவிர்க்க முடியாததே ஆகும் ஆகையால் சாந்திரமானரீதியாக ஆச்சுவினமாதம் என்று சொல்லப்படும். புரட்டாசிமாதம் 1 ஆம் நாள் (17—9—82) முதல் 30 ஆம் நாள் (16—10—82) முடிய மல மாதமாகும்.

புரட்டாசி மாதம் 31 ஆம் நாள் (17—10—82) முதல் நிஜ ஆச்சுவீனம் என்ற பெயரால் சொல்லப்படும். இத்த நிஜ ஆச்சுவீனமாதம் ஆரம்ப முதல் நவராத்திரியும், இம்மாதக் கிருஷ்ண சதுர்த்தசியான தீபாவளிப் பண்டிகை ஐப்பசிமாதம் 27 ஆம் நாள் (13—11—82) சனிக்கிழமை பின்னிரவிலும் செய்யவேண்டும்,

நவராத்திரியில் சண்டிஹோமம்செய்பவர்களும், நவராத்திரி ஆரம்பம்முதல் முடிவுவரை கும்பம் வைத்து பூஜை செய்பவர்களும் புரட்டாசிமீ 31உ (17—10—82) ஞாயிற்றுக்கிழமைதினம் பிரதமையில் வைத்திருதீ என்ற யோகத்துடன் சம்மந்தபட்ட சித்திரை நட்சத்திரம் சேருவதால் அன்று கும்பஸ்தாபனம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தால் புத்திர நாசமும், தன ஹானியும் ஏற்படும் என்று தேவி புராணம் என்ற நூலிலும், ருத்ரயாமளம் என்ற நூலிலும் கூறப்பட்டுள்ளது.

தேவிபுராணம் :– "ப்ரதிபத்சித்ரா வைத்ருதீயுக்தாபி துவிதீயாயுதா : சேத்ஸைவக் ராஹ்யா I" அஃதாவது, பிரதமையும், சித்திரை நட்சத்திரமும், வைத்ருதீ யோகமும் சேர்ந்தால் மறுதினமே கும்பஸ்தாபனம் செய்யத்தக்கது.

ருத்ரயாமளம் :– "வைத்திருதௌ புத்ரநாசஸ்யாது சித்ராயாம் தன நாசனம்;" அஃதாவது, வைதிருதீயோகம், புத்ரநாசத்தையும், சித்திரைநட்சத்திரம் தனநாசத்தையும் ஏற்படுத்தும். ஆகையால் ஐப்பசிமாதம் முதல்தேதி (18—10—82) திங்கட்கிழமை உதயத்திற்குள் கும்பஸ்தாபனம் செய்து நவராத்திரி ஆராதனம் செய்யவேண்டும்.

கட்டுரை எண். 29

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M. A., B. Lit., D. P. P. A., D. U. N., I. U.

சொல்லும் பொருளும் எனநடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே! நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே. 28

அ. சொல்லும் பொருளும்என......பரிமளப் பூங்கொடியே!

(1) நடனமிடுகின்ற தனது துணைவராகிய சிவபெருமானுடன் சொல்லையும் பொருளையும் போல பிரிவின்றித் தழுவி நிற்கும் மணங்கமழும் பூங்கொடி அல்லது மெல்லிய கொடி போன்றவள் என்பது பொதுவான பொருள்.

(2) இங்கு சிவசக்தி ஐக்கியத்திற்கு ஒரு இணையற்ற உவமையினை எடுத்தாளுகிறார். சொல்லும் பொருளும் வெவ்வேறாய்த் தோன்றிடினும் அவையொன்றை யொன்று பிரியாதவை. பிரிக்க முடியாதவை. சொல்லென்றால், அதற்குப் பொருளும், பொருளென்றால் அதைக் குறிக்கும் சொல்லும் நிச்சயமாக உண்டு.

"சொல் என்பது பேசப்பட்டும், கேட்கப்பட்டும் ஞானேந்திரிய கோசமாய் இருப்பதால் அது, சக்தி பரமான விமர்சாம்சம், பொருள் மனதால் மட்டும் அனுபவிக்கக் கூடியதாதலால் அது சிவாத்மகமான பிரகாம்சம்." இவ்வாறு விளக்குகிறார் உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள்.

(3) மகாகவி காளிதாஸன் தனது புகழ்மிக்க நூலின் காப்புச் சுலோகத்தில் "வாக்கர் தாவிவ" அதாவது, வாக்கும் (சொல்லும்) அர்த்தமும் (பொருளும்) போல் இணைந்த உலகத் தாய் தந்தையாகிய பார்வதி பரமேஸ்வரனை வணங்குகிறேன் எனக் கூறுமிடத்து இவ்வுவமையினையே எடுத்தாண்டிருக்கிறான்.

உலகில் பொருளற்ற சொற்களும், பயனற்ற சொற்களும் கூட உண்டு. அப்படியானல் 'சொல்' என்று இங்குக் குறிப்பதில் ஏதாவது சிறப்புப் பொருள் (விசேஷ அர்த்தம்) உண்டோ வென்னில் உண்டு எனலாம்.

(4) முதலில், 'சொல்' என்பது ஆதியில் இறைவன் உரைத்த வேதங்கள் எனலாம்.

" மறைகள் ஈசன் சொல் " என்பது சிவஞான சித்தியார்.

அம்மறைகளாகிய சுருதிகளின் பணியும் கொழுந்தும் பதி கொண்டவேரும் திரிபுர சுந்தரியே என்றதனல் மறைகளின் வடிவு (வேதஸ்வரூபம்) அம்பிகை ஆவாள். அச்சொல்லாகிய வேதங்கள் உணர்த்தும் மெய்ப்பொருள் இறைவன் ஆவான். அதாவது 'அவள்' வேதமாகிய சொல். 'அவன்' அதன் பொருள். அல்லது அவர்களது ஐக்யபாவத்துக்கு அவர்களேதான் உவமையாக முடியும் என்றவாறு.

(5) அவ்வேதங்களின்முன்மொழிவதும், தாரகம், பிரணவம், குடிலை, 'தனிமொழி', 'முன்மொழி' என்றெல்லாம் சிறப்பிக்கப் படுவதுமாகியது 'ஓங்காரமே'. சொல் என்ருல் அதன் பொருள் இறைவன்; அன்னையோ பிரணவத்தின் ஸ்வரூபம். அவளை 'ஓங்காரி' என்றே திருமந்திரம் முதலாய நூல்கள் குறிப்பிடு கின்றன.

அவள் மயில் வடிவாகி இறைவனைப் பூசித்தாள் என்பதன் உட்கருத்தும் இதுவே. ஏனெனில் மயில் பிரணவம் போன்ற அமைப்புடையது.

இவை சைவபரமான விளக்கங்கள், இனி சாக்தபரமான விளக்கங்களைக் காண்போம்.

(6) அவ் வேதங்களின் நடுநாயகமாகிய ஸ்ரீ ருத்ரத்தின் நடுவண் வரும் திருவைந்தெழுத்தின் உயிர் ஆகிய 'சிவம்' என்பதே என்றுமுள்ள உண்மைச் சொல் எனக் கொண்டால் அச்சிவம் என்ற சொல்லின் பொருள் 'மங்களம்' என்ருகும். " மங்களாக்ருதி " — " மங்களவடிவினள் " என்கிறது சகஸ்ர நாமம்.

அவள் சொல்லானல் அவன் அதன் பொருள். அவன் சொல்லானல் அவள் அதன் பொருள். இதுவே சிவசக்தி ஐக்யத்தின் சிறப்பு.

(7) 'சொல்' என்பது மிக உயர்ந்த தத்துவ மொழிகளாகிய மஹாவாக்யங்களே எனலாம்.

"தத்துவமஸி" — "அது நீயாக விருக்கிறாய்"

"அஹம் பிரம்மாஸ்மி" — "நான் பிரம்மமாக விருக்கிறேன்"

"சிவோஹம்" — "நானே சிவமாகிறேன்"

இப்பேருரைகளைத் திருமூலர்,

"நீயது வானாய் எனநின்ற பேருரை
ஆயது நானானேன் என்னச் சமைந்தறச்
சேய சிவமாக்கும் சீர் நந்தி பேரருள்
ஆயது வாயனந் தானந்தி யாகுமே"

என்கிறார்.

"தத்பத லக்ஷியார்த்தா" —'அது' என மஹாவாக்கியங்கள் குறிக்கும் சொல்லின் இலட்சியப் பொருளானவன் அம்பிகை எனத் சகஸ்ரநாமம் புகழுகிறது அதாவது 'அது' என்னும் சொல்லின் பொருள் அன்னையே என்கிறது.

"ஸத்து சிதானந்தமதாய் சகலவுயிர்க்குயிர் ஆனவள் நீ
தத்துவ மஸ்யாதி மஹாவாக்கிய தத்பர வஸ்த்துவும் நீ"

எனத் தன் கீர்த்தனையில் இசையுடன் புகழுகிறார் ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள்.

அச்சொல்லின் இலட்சியப் பொருளாக எப்படி பொருந்து கிறாளோ அவ்வாறே இறைவனுடன் இலட்சியத் துணையாகப் பொருந்தித் தழுவுகிறாள்.

சுருங்கவும், தெளிவுபடவும் கூறின், இணையற்றதாகவும், இறைவனின் வடிவாகவும் கருதப்படும், வேதங்கள், பிரணவம், திருவைந்தெழுத்து, மஹாவாக்கியங்கள் ஆகிய இவை எப்படி இறைத் தன்மையுடன் பொருந்துகிறதோ அப்படிப் பட்டதே சிவசக்தி ஐக்யம் என்பதாகும்.

(8) மலரும் மணமும் வெவ்வேறு ஆயினும் இரண்டையும் பிரிக்க வியலாது. அவ்வாறே சிவசக்தி இரண்டெனத் தோன்றினாலும் பிரியாதவர்கள் ஆவார்கள். அதாவது 'பேதா பேத நிலை' என்னும் நிலையில் இருப்பவர்கள் என்பதனை விளக்கவந்த உவமை "சொல்லும் பொருளும்" என்பதாகும்.

(9) பல ஆழ்ந்த சாக்த சித்தாந்தக் கருத்துக்களைப் பாரதியார் தனது எளிய காதல்பாடல்களில் எடுத்தாண்டிருக்கிறார்.

"வீசுகமழ் நீயெனக்கு விரியுமலர் நானுனக்கு
பேசுபொருள் நீயெனக்கு பேணுமொழி நானுனக்கு"

என்ற கண்ணம்மா பாடலில் நூற்றாண்டுக்கவிஞர் இப்பேதாபேத நிலையினை எளிமைபடக் குறிப்பிடுகிறார்.

(10) சொற்களிடத்துப் பொருந்திய பொருள்வடிவானவன் இறைவன் என்பதனைத் தணிகைப்புராணத்துள் கச்சியப்ப முனிவர்,

"சொல்லார் பொருளே! சரணம், சரணம்;
சுடரும் சுடரே சரணம் சரணம்"

என்ற வீரட்டகாசப் படலப் பாடலில் குறிப்பிடுகிறார்.

(11) நடமாடும்இறைவனின் சக்தி சிவகாமவல்லியாதலால் அதற்கேற்ப புல்லும் பரிமளப் பூங் கொடி யென்றார்.

ஆ. நின் புது மலர்த்தாள்......சிவலோகமும் சித்திக்குமே

(1) புத்தம் புது மலரனைய நின்து திருவடியினை இரவும் பகலும் வணங்கும் அடியவர்களுக்கு அழிவில்லா அரசவாழ்வும், பயன் விளைக்கும் தவ நெறியும், சிவலோகமும் எளிதிற் கைகூடும் என்கிறார்.

(2) காலத்தால் மாற்றமும், தேய்வும், அழிவும் கொண்ட பொருள்களை நம்பிப்போற்றாது, என்றும் புதுமைப்பொலிவுடன் திகழும் நின் திருவடியினை இரவும் பகலும் வணங்குவோர் அழியா அரசு முதலிய சிறப்புக்கள் எய்துவர் என்பது தோன்ற "நின் புதுமலர்த்தாள்" என்றார்.

(3) அழியா அரசு என்றது நிலையான அரசாட்சி, அல்லது உறுபசியும், ஓவப்பிணியும், செறுபகையும் ஆகியவற்றால் இடையில் அழிவில்லாத் தன்மையுடைய அரசாட்சியை உணர்த்தியது.

'அரசு' என்பதுநாட்டையாளும்'அரசபீடம்' மட்டும்அன்று,

ஞானச்செங்கோல் ஓச்சும் குரு பீடங்களும் அரசுகளே ஆகும்.

கவியரசாய்த் திகழ்வதும், கலையரசாய்த் திகழ்வதும், அவ்வாறே தத்தமது துறையில் தலைமை எய்தி, பொன்னும், பொருளும், புகழும் எய்தி இடையழிவில்லாமல் வாழுதலும் அரசநிலையே ஆகும்.

(4) செல்லும் தவநெறியென்பது முத்திக்குச் செல்லும் தவ நெறி யென்பார் உரையாசிரியர் திரு சண்முகநாதன் அவர்கள்.

(5) "செல்லிடத்துக் காப்பான் சினங் காப்பான்" என்ற குறளின் பொருளை இங்கு நினைவுகூர்தல் வேண்டும். எங்குத் தனது சினம் பலிக்குமோ – அல்லது விளைவினை ஏற்படுத்துமோ அங்குச்சினம் காக்கவேண்டுமென்று இங்குப்பொருள் தெளி வாகத் தோன்றுகிறது.

அவ்வாறே, செல்லும் தவநெறி என்பதனை பலிக்கும் சிறப்புடைய தவநெறி அல்லது உயர்வான உதவியான விளை வினை நல்கும் தவநெறி எனவே கொள்ளுதல் வேண்டும்.

(5–A) குச்சக முனிவர் சோழநாட்டு அனுமயத்தில் உசத்தியர் மகளை உயிர்ப்பிக்கவேண்டி, தனது நோற்றலின் ஆற்றலினால் கூற்றுவனையும் குதிக்கச்செய்தார்.

இங்குப் பயன்மிக்க விளைவு ஏற்பட்டது. இதுவே செல்லும் தவநெறி.

(5–B) நெல்லைச் சீமையில் மழையின்றிவாடிய உயிர்களைக் கண்டு தானும் வாடினார் ஸ்ரீ முத்துசுவாமி தீட்சிதர் அவர்கள்.

அன்னையினை "ஆனந்தாமிர்தகர்ஷிணி, அமிர்தவர்ஷிணி" எனப் புகழ்ந்து 'அமிர்தவர்ஷிணி' இராகத்தில் (மழையினைப் பெய்விக்கும் மேகராகக்குறிஞ்சி) பாடி ஸ்ரீ தீட்சிதர் அவர்கள் வான்மழை பெய்வித்த வரலாறு படைத்தார்கள் 18–ஆம் நூற்றாண்டில்.

இங்கு அவரது தவநெறி விளைவினை ஏற்படுத்தியது இதுவும் "செல்லும் தவநெறி"

(5–C) குலப்பெண் ஒருவளைச் சினந்து நோக்க, அவள் "என்னையும் கொக்கென்று நினைந்தீரோ? கொங்கணவா" எனக் கேட்க கொங்கணவமுனி பரிபவப்பட்டுத் திரும்பினார் எனக் கூறுவார்கள் அல்லவா?

இதுதான் செல்லாத தவநெறி, அல்லது பயன் விளைக்காத தவநெறி.

தன்னை மேல்நிலைக்கு உயர்த்திச்செல்வதும், பிறரிடம் நல்ல பயனுள்ள விளைவினை ஏற்படுத்துவதுமே செல்லும் தவநெறி யாகும்.

(6) குண்டலினி சக்தியினை மூலாதாரத்திலிருந்து சகஸ்ராரம் வரை எழுப்பும் யோகமும் ஒருவித தவநெறியே. இங்கு அச்சக்தி மேல் நோக்கி 'சகஸ்ராரம்' வரை செல்லும் செயல் விளைவதால் அதுவே செல்லும் தவநெறி எனலாம்.

(7) அவ்வாறே ஸ்ரீசக்ர பாவனையில் பிந்து மண்டலத்தில் பராசக்தியினைக் காணச்செல்வதும் பெரிய தவநெறியே ஆகும்.

இங்குப் பாவனையால் இருபத்தைந்து கோட்டைகள், ஒன்பது ஆவரணங்கள், ஆங்காங்குள்ள மதில்கள், வனங்கள், தேவதைகள் ஆகிய அனைத்தையும் பயணமாகக் கடந்து செல்லும் கடினமான தவநெறி யிதுவாகும்.

(8) துறவியாகவோ, கண்மூடி மௌனியாகவோ வாழ்வு நடத்துவதுதான் தவநெறி என்பது அன்று!

இடைவிடாத இறை சிந்தனையே சிறந்த தவநெறியாகும்.

சுந்தரர் திருத்துறையூரில் இறைவனிடம் தவநெறியினை வேண்டிப் பெற்றார் என்ற வரலாற்றினை இங்கு மீண்டும் நினைவு படுத்திச் சிந்தித்தால் இது விளங்கும்.

(9) இவ்வுலகில் தனக்கு மேல்நிலை அளிக்கும் அழியா அரசு, தனக்கும் பிறர்க்கும் பயன் விளைக்கும் தவநெறி, இத்துடன் நில்லாது மறுமையிலும் சிவலோக முத்தியும் கிடைக்கும் என்கிறார்.

இறைவன் வாழும் அதே உலகில் வாழும்நிலை எய்துதலை 'சாலோக்கியம்' என்பர்.

இச்சாலோக்கிய முத்தி இரவும் பகலும் தொழுவார்க்கு எளிதில் கிட்டுவதாகும்.

தம்பதிகளிடையே ஒற்றுமை நிலவுதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

சிவஞானபோதச் சிறப்பு

'சித்தாந்தப் புலவர்மணி'

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

1. உலகப் பெருநூல்கள் ஆகிய விவிலியம் திருக்குரான் திரிபிடகம் செண்ட் அவெஸ்ட்டா முதலியவைகள் அனைத்திலும், மிகவும் சுருக்மான நூல், திருக்குறள்; அது 'குறுகியது' எனப் பொருள்படும். 1300 குறட்பாக்களால், 2600 சிறிய வரிகளிலேயே இயன்றுள்ளது. இத்தகைய சுருக்கமான திருக்குறளையும்விட, மிகமிகச் சுருக்கமான ஆனுல் மிகவிரிவான பொருட் சிறப்பு மிக்க நூல் சிவஞானபோதம்.

2. சிவஞானபோதம், 624 எழுத்துக்களில், 216 சொற்களில் 40 வரிகளில் இயற்றப்பெற்றுள்ளது. இத்துணைச் சுருக்மான அளவில் இயற்றப்பெற்றிருப்பினும், அஃதுஉலகின் கண் உள்ள பல்வேறு வகையான சமயக் கொள்கைகளையெல்லாம் தன்னகத்தே உள்ளடக்கிப் பொதிந்து வைத்துக் கொண்டு, சிறந்துயர்ந்த தத்துவஞானப் பெருநூலாக மேம்பட்டு விளங்குகின்றது.

3. இறை உயிர் உலகு (பதி - பசு - பாசம்) என்னும் முப்பொருள்களைப்பற்றி, முன்னுக்குப்பின் முரண்பாடு இன்றி, முறையே தருக்கநெறி பிறழாமல் ஆராய்ந்து, தடை விடை முறையில், பிறர் கொள்கைகளை மறுத்தும், தன்கொள்கைகளை நிறுவியும், சமய தத்துவ உண்மைகளைத் திறம்பட விளக்குதலில், சிவஞானபோதம் எல்லையில்லாச் சிறப்புடையதாகத் திகழ்கின்றது.

4. இறைவன், உயிர்களோடு கலப்பினுல் உடலின் உயிர் போல் ஒன்ருகியும், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன் போல வேருகியும், உயிர்க்குயிராதற்றன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம்போல உடனுகியும் நின்று, உயிர்களுக்குக் காணும் உதவி, காட்டும் உதவிகளைப் புரிந்துவரும் முறைமையினை, 'அத்துவிதம்' என்னும் சொற்ருெடரின் பொருளால், வெற்றித்திறம் விளங்கும்படித் தெளிவித்தருள்கின்ற சிவஞானபோதம், அறிஞர்களுக்கெல்லாம் ஆராப் பெருவிருந்தாகும்.

5. சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கையானது, அறிவு நூல்களின் முடிபெலாம் அகத்தடக்கியது; அருமை பெருமைகள் பலவும் நிறைந்தது. இத்தகைய சிறந்த சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கையினைத் தருக்க நெறிமுறைகளுக்கும், அறிவியல் உண்மைகளுக்கும், அருள்ஞானியரின் அனுபவ நலங்களுக்கும், உலகியல் நடைமுறைகளுக்கும் சிறிதும் முரண்படாதபடி, சிவஞானபோதம் அழகுற விளக்கித் தெளிவிக்கும் நிலை, மிகப்பெரிதும் வியந்து போற்றுதற்குரியது.

6. சமய தத்துவ உண்மைகளைச் சம்ஸ்கிருத மொழியினால் தான், தக்கபடி விளக்குதல் இயலும்; 'வீடுபேறு தமிழர் கூறுர்' என்று பரவலாக ஒரு வலுவான கருத்து நிலவியிருந்த காலத்தில், அக்கருத்து மிகவும் தவறானது; 'சமய தத்துவ உண்மைகளை அவரவர்களின் தாய்மொழியின் வாயிலாக விளக்குதலே சாலவும் பொருத்தமும் சிறப்பும் உடைய செயலாகும்' என்பதனை வலியுறுத்தி, நம்முடைய அருந்தமிழ்ப் பெருஞ்சான்றோர் ஆகிய மெய்கண்டதேவர் பெருமான், தித்திக்கும் செந்தமிழில் செய்தருளிய, தத்துவ ஞானப்பெரு நூலே சிவஞான போதம்.

7. சங்கரர் இராமாநுசர் மத்துவர் சீகண்டர் நிம்பார்க்கர் வல்லபாசாரியர் சைதன்யர் முதலிய சான்றோர்கள் பற்பலரும், 'அத்வைதம்' பற்றிய தம்முடைய பேருரைகளையெல்லாம், வட மொழியிலேயே இயற்றிப்போந்தனர். அங்ஙனம் இன்றி, அமிழ்திலும் இனிய நமது தாய்மொழியாகிய தமிழ் மொழியிலேயே,

"பொய்கண்டார் காணப் புனிதம்எனும் அத்துவித
மெய்கண்ட நாதன் அருள் மேவும்நாள் எந்நாளோ?"

என்று. வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகராகிய தாயுமான சுவாமிகளால், பெரிதும் புகழ்ந்து போற்றிப் பாராட்டப்பெற்ற, மெய்கண்டதேவரால் அருளிச் செய்யப் பெற்ற ஒப்புயர்வற்ற திப்பிய நூல், சிவஞானபோதம் ஆகும்.

8. உயர்ந்த பெருநூல்கள் விளக்கத் தகுந்த சிறந்த பயனுடைய பொருள்கள், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்கள் ஆகும் என்பர் அறிஞர்; அவற்றுள் அறம் பொருள் இன்பம் என்னும் இம்மூன்று பொருள்களை மட்டுமே திருக்குறள் விளக்கியது. இங்ஙனம் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்தாமும், விளக்க முற்படாமல் விட்டுச்சென்ற, வீடுபேறு பற்றிய மிக மேலான சிறந்த

உண்மைகளையெல்லாம், தெளிவுற விளக்கியருளிய சிறப்பு மிக்க நூல், சிவஞானபோதமேயாகும்.

9. சிவஞானபோதம், பற்பல அதிகரணப் பாகுபாடுகளை யுடையது. ஒவ்வோர் அதிகரணமும், தன்னாற் கூறப்படும் பொருள் (விஷயம்), அதன்கண் ஐயப்பாடு (சம்சயம்), அதற்குப்பிறர் கூறும் கருத்து (பூர்வபட்சம்), அதனை மறுத்துரைக்கும் கொள்கைத் துணிவு (சித்தாந்தம்), ஒன்றோடொன்றற்குள்ள இடையீடில்லாத இயைபு (சங்கதி), என்னும் ஐந்துவகைக் கூறுகள் கொண்டது. இத்தகைய அரிய இனிய அதிகரணப் பாகுபாட்டின் அமைப்பு முறையில் இயன்றுள்ளதனுல், சிவஞானபோதம், மிக்க நுட்பமும் திட்பமும் ஒட்பமும் செறிந்து, அறிஞர்கள் வியந்து போற்றுதற்கு உரியதாக விளங்குகின்றது.

10. சிவஞானபோதம், பதி பசு பாசம் என்னும்முப்பொருள்களையும் பற்றிச்செவ்விதின் விளக்குகின்றது; அது பன்னிரண்டு நூற்பாக்களை யுடையது. பொது அதிகாரம், உண்மை (சிறப்பு) அதிகாரம் என்னும் இரண்டு பகுதிகளாக இயன்றது; பிரமாண இயல் இலக்கணவியல் சாதனைஇயல் பயனியல் என்னும் நான்கு இயல்கள் கொண்டது. அதன்கண் முப்பத்தொன்பது அதிகரணங்கள் அமைந்திருக்கின்றன. இவைகள் ஒவ்வொன்றின் அமைப்பும் இயல்பும், அறிஞர்களுக்கு வியப்பும் விம்மிதமும் விளைவிக்கவல்லன.

கவிதை

எல்லா நூல்கள் தம்முள்ளும் இனிதே சுருங்கித் திகழ்வதெனச்
சொல்லா நிற்பர் திருக்குறளைச்; சூழ்ந்து கருதின், அதனினுமே
பல்லாற் ருனும் சிவஞானபோதம் சுருங்கிப் பயன்பெருக்கும்!
நல்லோர் புகழ்அம் மெய்ந்நூ லின், நலங்கள் பெரிதும்
[வரம்பிலவாம்! (1)

நாற்ப தடியால், இருநூ ற்றுப் பதினு றெளிய நற்சொல்லால்,
ஏற்ற அறநூற் றிருபான்நான்(கு) எழுத்தால், சமயக்
[கொள்கையெலாம்
தேற்றித் தெருட்டும் சிவஞானபோதச் செழுநூல் போல்எங்கும்
வேற்றோர் நூல்இன் றெனவுரைப்பின், மிக்க அதன்சீர்
[விளம்புவர்யார்? (2)

இறையே உயிரே உலகென்றே இலங்கும் மூன்று பெரும்
[பொருளும்,
முறையே தருக்க நெறிநின்று, முன்னும் பின்னும் முரணுமே.
நெறியே ஆய்ந்து தடைவிடையால், நிறுத்தும் மறுத்தும்
[மெய்ந்நிறீஇக்,
கறையின் றுணர்த்தும் சிவஞான போதம், கடல்போற்
[பெருஞ்சீர்த்தாம்! (3)

ஒன்ருய் வேருய் உடனுக, உயிர்கள்தம்மோ டொருங்கியைந்து,
நன்றே அருளால் அவற்றினுக்கு, நயந்து கண்டும் காட்டியுமே,
நின்றே உதவும் இறைவனருள் நிலையை, அத்துவிதப்
[பொருளால்,
வென்றே விளக்கும் சிவஞான போதம் அறிவுக் குயர்
[விருந்தாம்! (4)

அறிவின் முடிந்த முடிபாக, அருமை பெருமை பலநிறைந்து,
செறியும் சைவ சித்தாந்தம் என்னும் சிறந்த கொள்கையினை,
நறிய அளவும், அறிவியலும், நல்லோர் அடைவும்,
[நடைமுறையும்,
நெறியின் அமையச் சிவஞான போதம் விளக்கும் நிலை
[சிறப்பாம்! (5)

தத்துவப் பொருள்கள் தம்மைச் சங்கத மொழியி னுல்தான்,
மெத்தவும் விளக்கல் கூடும்,என் றிருந்த விதியை மாற்றி,
வித்தகர் மெய்கண் டார், நம் வியன்பெருந் தமிழ்நற்
[சான்ருேர்
தித்திக்கும் தமிழிற் செய்த நூல், சிவ ஞான போதம்; (6)

சங்கரர், இராமா நுசர், மத்வர், சிகண்டர், சைதன்யர்,
[நிம்பார்க்கர் எல்லாம்,
சங்கத மொழியில் தான், தத்தம் நூல்கள் தகவென இயற்றினர்,
[போந்தார்!
இங்கந்த நிலையை மாற்றி,மெய் கண்டார் எனும் அருட்
[பெருந்தமிழ்ச் சான்ருேர்
தென்றமிழ் மொழியிற் செய்தளித் தருள்நூல், சிவஞான
[போதநூல் ஆகும்! (7)

அறம்பொருள் இன்பம் வீடு நான்கும்நூற் பயனுய்ச் சொல்வர்!'
திறம்பட அவற்றுள் மூன்றே, திருக்குறள் கூரு நிற்கும்;
உறழ்ந்தசீர்ப் புலமைத் தெய்வத் திருவள்ளுவ னாரும் ஓதாச்
சிறந்தநற் பொருளைச் செப்பும், சிவஞான போத நூலே! (8)

தன்ஞற் கூறப் படும்பொருளும், அதன்கட் சாரும் ஐயப்பாடும்,
முன்னி அதற்குப் பிறர்கூறும் முடிபும், அவற்றை
[மறுத்துரைத்துத்
துன்னி நிறுவும் சித்தாந்தத் துணிபும், இயைபும், அதிகரணம்
என்ன அமையச், சிவஞான போதம் தொடர்புற் றினிதிலங்கும்

பதிபசு பாசம் என்னும்முப் பொருளும், பற்றிநற் பன்னிரு
[நூற்பா,
பொதுசிறப்பு என்னும் இரண்டதி காரம், பிரமாணம்
[இலக்கணம் பொருந்து
விதிசெய்சா தனமே பயனியல் என்னும் நான்கியல்,
[வியன்முப்பத் தொன்பான்
அதிகரணம் அமையச், சிவஞான போதம் அறிஞர்கள்
வியந்திடத் திகழும். (10)

தருமை ஆதீனத் தனிப்பெருந் தொண்டு

பேராசிரியர், திரு. சொ. அரியநாயகம் எம். ஏ.,

தருமை ஆதீனத்தில் சிவம்வளரும் — ஞானத்
தமிழ்வளரும் மோனத் தவம்வளரும் — நம் (தருமை)

1. ஆகமத் திருமுறை பலர்படிக்கும் — சிவ
ஆகமப் பள்ளிகள் தினம் நடக்கும்
ஆலயப் பணியாவும் நிருவகிக்கும் — கல்வி
அமுதாலே இளமைக்கு நலம் கொடுக்கும் (தருமை)

2. நோய்க்கு மருந்தாகிச் சுகம்பெருக்கும் — பிறவி
நோய்க்குப் பகையாகி அருள்தொடுக்கும்
தாய்க்கு நிகராகித் தயை யளிக்கும் — இன்பத்
தமிழுக்கு உயிராகி வளம்கொடுக்கும் (தருமை)

3. செந்தமிழ்ப் புலவருக்குத் தாய்ப்பீடம் — தமிழ்
சீருடன் பயின்றிடும் கலைக்கூடம்
சிந்தனை வளஞ்செயும் உயர்பாடம் — சைவ
சித்தாந்தம் ஊட்டிடும் சிவபீடம் (தருமை)

4. ஆண்டுக்(கு) ஒருமுறை பெருமுயற்சி — சிவ
ஆகமந் தன்னில் தனிப்பயிற்சி
யாண்டும் கிடையாத மனவளர்ச்சி — அதன்
அனுபவம் வழங்கிடும் சிவ உணர்ச்சி (தருமை)

5. தேனிதழ் ஊறிடும் சுவைபருக — வண்டு
தேவாரம் பாடிடும் மனம்உருக
சேரிகள் யாவினும் சிவம்பெருக — உயர்
செந்தமிழ்ச் சொக்கன் அருள்பரவ (தருமை)

6. ஆயிரம் ஆயிரம் தமிழேடு — அவை
அணிசெயும் நூலகம் சிறப்போடு
தூயநல் இலக்கியம் ஆய்வோடு — பல
துறைகளில் வெளியிடும் அழகோடு (தருமை)

7. ஆவணி மூலப் பெருநாளாம் — அது
அறிஞரைப் போற்றிடும் திருநாளாம்
சேவையும் சீலமும் உயர்நாளாம் — தமிழ்
சிறப்புற வரிசைகள் தருநாளாம் (தருமை)

8. சாத்திரம் மலர்கிற தனி இதழாய் — ஞான
சம்பந்தம் என்னும் தமிழிதழாய்
தோத்தரித்(து) அன்பர்கள் புகழிதழாய் — அன்புத்
தூதாகி மணம்பரப்பும் பணிஇதழாய் (தருமை)

9. செந்தமிழ் பயிலஒரு சரணலயம் — அது
சென்னையின் பிரச்சாரப் பணியாலயம்
சந்ததம் சிவராகம் பயிலாலயம் — நம்
சண்முகன் திருவருள் பொலிவாலயம் தந்த (தருமை)

10. ஆலவாய்ச் சொக்கன் அருளாலே — குரு
ஞானசம் பந்தன் பெயராலே
சீலமாய்ப் பணிமன்றம் செயலாலே — தொண்டுச்
செல்வங்கள் ஓங்கிடும் மலைபோல (தருமை)

காலக் கண்ணுடி 1.

ஆங்கில மாதங்கள் பன்னிரண்டுக்கும் கிழமைகள் காண இவ்வட்டவணை உதவும்
பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள்.

மாதங்கள்	* மாதங்கள்	கிழமைகள்						
		1	2	3	4	5	6	7
ஜனவரி, அக்டோபர்	ஜனவரி, ஏப்ரல், ஜூலை	திங்	செவ்	புத	வியா	வெள்	சனி	ஞாயி
பிப்ரவரி, மார்ச்சு, நவம்பர்	பிப்ரவரி, ஆகஸ்டு	வியா	வெள்	சனி	ஞாயி	திங்	செவ்	புத
ஏப்ரல், ஜூலை	செப்டம்பர், டிசம்பா	ஞாயி	திங்	செவ்	புத	வியா	வெள்	சனி
மே	அக்டோபர்	செவ்	புத	வியா	வெள்	சனி	ஞாயி	திங்
ஜூன்	மார்ச்சு, நவம்பர்	வெள்	சனி	ஞாயி	திங்	செவ்	புத	வியா
ஆகஸ்டு	ஜூன்	புத	வியா	வெள்	சனி	ஞாயி	திங்	செவ்
செப்டம்பர், டிசம்பர்	மே	சனி	ஞாயி	திங்	செவ்	புத	வியா	வெள்

* லீப்வருடங்களுக்கு மட்டும் இப்பிரிவைப் பின்பற்றவும்

இவ்வட்டவணையைப் பயன் படுத்த வேண்டிய முறை :— இவ்வாண்டு 1982 ஜனவரி, அக்டோர் மாதங்கள் வெள்ளிக்கிழமையில் பிறக்கின்றன. (கிழமையின் 5ஆவது பிரிவு) இவ்வாறே ஏனைய மாதங்கள் 5ஆம்பிரிவின் கீழ்வரும் நாட்களிலேயே பிறக்கும். அடுத்த ஆண்டு (1983) ஜனவரி, அக்டோபர் முதல் நாள் சனிக்கிழமை. ஏனையமாதங்கள் 6வது பிரிவின் கீழ்வரும்நாட்களில்பிறக்கும். இவ்வாறேதொடர்ந்துகாணவும். லீப்வருடங்களில் முதல் நாளைக்கண்டுகொள்ள நடுவில் குறிப்பிடப்பட்டுள்ள மாதங்களைப் பின்பற்றவும்.

இதனைக் கணனம் செய்தவர் :- பிரபலசோதிடர் பாலகவி திரு. எ. பிரமநாயகம் பிள்ளை.

உதவியவர் :- திரு. விசா. குருசாமி தேசிகர்.

ஒழுங்கும் ஒழுக்கமும்

பேராசிரியர், **திரு. மது. ச. விமலானந்தம்**

ஒரு சிறந்த சான்றிதழின் உயிர்நாடி, ஒருவரது ஒழுக்கம் ஒழுங்குபற்றி உரைப்பதாகும். பிற பெருமையெல்லாம் பேசப் படினும் இவை இரண்டுமே வேண்டுவன. இன்றியமையா இவையின்றிச் சான்றிதழ் சிறவாது. முழுமைபெறுது ஒருவரை எடைபோட - கணித்தறிய புறப் பழக்க வழக்கம், அகப் பண்பாடு என்ற இரண்டுமே கருதப்பெறும்.

ஒழுக்கம் உள்ளத்தைப் பற்றியது; ஒழுங்கு உடம்பினை ஒட்டியது. எந்தமனிதனுக்கும் அகம்-புறம்-உள்நிலை வெளித் தோற்றம் என இரண்டு உண்டு. அந்த அகத்தின் அருமை குறிப்பதே ஒழுக்கம்; புறத்தின் பெருமை சுட்டுவதுதான் ஒழுங்கு.

'ஒழுங்கு ஊராளும்' என்றொரு பழமொழி உளது. ஒழுங் குடையான் ஊரை ஆள்வான். உலகினை இயக்கிடுவான். தன்னை ஒழுங்குபடுத்தியவனே பிறரையும் ஒழுங்குபெறச் செய்வான். ஊரையும் ஒழுங்குறச் செய்யமுடியும். எனவே ஒழுங்கு உடையான் ஊரைக் கட்டுப்படுத்தி இட்டுச்செல்ல இயலும். தன்னைக் கட்டுப்படுத்தாதவன் ஏனையோரை எங்ஙனம் கட்டுப் படுத்த இயலும்? தன்னை இயக்க வல்லவன்தானே பிறரையும் இயக்க முடியும்! ஆங்கிலத்தில் Conduct என்ற சொல் அமைந்த அழகு ஆழ்ந்து அறியத்தக்கது.

ஒழுங்கு என்பது ஒருவனது எண்ணத்தின்வண்ணம், உள்ளாந்தரத்தின் வெளிப்பாடு - செயற்பாடு. நடத்தை என்பது ஒருநிலைக் கண்ணாடி; அதில் ஒவ்வொருவரும் தம்மைப் பிரதி பலிக்கிறார்கள்; பழக்க வழக்கம் ஒவ்வொருவர் அறிவினையும் அணிசெய்யவேணும்; இவ்வுலகில் அவர்களின் வழியினைப் பதப்படுத்த வேண்டும். ஏனெனில் பழகும் முறைகளே சின்னஞ் சிறு அறநெறிகளாய் அமைகின்றன. பேரறங்களின் கூறுக ளாய்ப் பிறங்குகின்றன.

நல்ல பழக்கத்தைப் போல் மலிவான ஒன்று இவ்வுலகில் இல்லை. காபி சர்க்கரை உப்புபோன்று பெறக்கூடிய பொருளே.

எளிய ஒன்றே என்றாலும் எல்லா நல்வாய்ப்பினையும் எப்போதும் ஏற்படுத்துவது இதுதான். எங்கும் நுழைய – எதிலும் இடம்பெற இதனைப் போன்றதொரு 'பாஸ்போர்ட்' வேறெதுவும் இல்லை எனலாம். யாருக்கும் எடுத்த எடுப்பிலேயே நண்பர் பகைவர் என எவரும் இல்லை; ஒருவரின் நடத்தையின் மூலமே நட்பும் பகையும் நேர்கின்றன.

நாளாவட்டத்தில் நாம் நினைப்பதும் செய்வதுமே நம் எதிர் காலத்தை ஏற்படுத்துகின்றது; இதற்கு நம் ஒன்றே உரியநெறி யாக அமைகிறது. ஒவ்வொருவரும் தம் அரியசரியான நடப்பின் வாயிலாகவே எளிய இனிய செயலினை எட்டமுடியும். நல்ல இலட்சியத்தை நோக்கி நம் நடத்தைச் செல்லின், அது நன் னடத்தை எனலாம்; இலட்சியத்தைவிட்டுத் திசை மாறிப் போயின், அது புன்னடத்தையாகும். ஒழுங்கு என்பது சிறுசிறு தியாகங்களால் உருவாவது.

ஒழுங்குடைமைக்கு உரை கல்லாக அமைவது காலந் தவறாமை (Punctvality). குறித்தநேரத்தில் குறித்தபணியினைச் செய்வதில் ஈடுபாடு முயற்சி மிக்கவனே ஒழுங்குடையவன் எனலாம். ஒழுங்கின் ஒட்டுமொத்தமான வெளிப்பாட்டினைக் காலந்தவறாமை மூலம் நன்கு அறிந்துகொள்ளலாம். ஒருவ னிடம் காலங்கருதாமை இருப்பின், அவன் எத்துணைதான் ஏற்றமும் தோற்றமும் உடையவனாயினும் சிறந்தவனாகக்கருதப் படமாட்டான். காலக்கண்டிப்பு ஒன்றே ஒழுங்கின் உறை விடம் – உச்சாணி - அச்சாணி எனலாம்.

அதுபோன்றே கடமையில் கருத்தும், எதனையும் செம்மை யாகச் செய்வதும், சொன்னசொல்தவறாமை ஆகியன ஒழுங்கின் உட்கூறுகளாக அமைதல் வேண்டும். எதனையும் செப்பமுறச் செய்வது, செய்யவேண்டிய கடமைகளைத் தவறாது – மறவாது செய்தல். வாக்குத் தவறாமை போன்றன ஒழுங்கின் உயர் அம்சங்கள் ஆகும்.

ஒழுங்கு இருக்குமிடத்தில் அழகு கொலுவிருக்கும். ஒழுங் காகப் பொருட்களை அடுக்கி வைத்தல், எடுத்தபொருளை எடுத்த இடத்தில் வைப்பது, திறந்தகதவினை மூடுதல், மூடியைப் போடுதல் போன்றன போற்றத் தக்க ஒழுகலாறுகள்.

நட்ட நடுச்சாலையில் பேசிக்கொண்டு நிற்றல், திருப்பத்தில் ஊர்திகளை நிறுத்தல், கண்ட இடங்களில் 'மலசலம்' கழித்தல் எச்சில் துப்புதல், ஒருவர் அனுமதி இன்றி அவர் பொருட்களை

எடுத்தல், கதவைத் தட்டாது - அனுமதி பெருது உள்ளே நுழைவது, ஒட்டுக் கேட்பது, எட்டிப் பார்ப்பது, குறுக்கே பேசுவது, நன்றி பாராட்டாமை, தவறுணராமை, பொது இடங்களில் சளசள எனப்பேசுதல், புகைப் பிடித்துப் புன்மை விளைத்தல், பிறர் இருக்கையில் காலைவைத்துக்கலாம் விளைத்தல், உண்ணும்போழ்து அக்கம் பக்கம் இருப்போர்க்கு அருவருப்பு உண்டாக்கல், எச்சில் பண்ணுதல், நகத்தைக் கடித்தல், கொட்டாவிவிடுதல் போன்றன தவிர்க்கவேண்டிய ஒழுங்கற்ற ஊறுபாடுகள்.

இந்திய நாட்டினைச் சுற்றிப்பார்த்த மேலை நாட்டவர் பலர் இந்தியர்களிடம் ‘ ஒழுங்கு என்பதே உப்பிற்கும் இல்லை ’ என எழுதிப் போந்துளர். பொதுவாக இந்தியரைப்பற்றி வெளிநாட்டவர் எண்ணம் – கணிப்பு இதுவாக உள்ளது; இது நமக்குக் குறைமட்டுமன்று கறையுமாகும். எனவே நம்மைப் பற்றிய நல்லெண்ணம் – நன்மதிப்பு உண்டாக ஒழுங்காக இருப்போம்; உரிய முறையில் ஒழுகுவோம் – உயர்வோம்.

ஒழுக்கம் என்பது ஒரு மனிதனின் எல்லா நடவடிக்கைகளின் ஒன்றியநிலை. குருதியோடு குருதியாகக் கலந்தஒன்று. உள்ளத்தின் ஆழத்தில் உறையும் கொள்கை – கோட்பாடுகளின் உணர்வால் – செல்வாக்கால் செம்மையாக்கம் பெற்ற பழக்கங்களின் ஒட்டுமொத்த கூட்டேயாகும். அறநோக்கில் வாழ்வின் இன்றியமையா உயிர்நிலை – தருமத்தின் தலைமணி எனத் தயங்காது இயம்பலாம்.

வெற்றி, தோல்வி, இன்பத்துன்பம், சமயம், சூழல், வணிகம் போன்ற வாழ்வின் எல்லாநிலைகளிலும் ஒழுக்கமே எதனையும் தீர்மானிக்கும். தலைவன் – நிர்மாணிக்கும் நற்கருவி. ஒழுக்கமே காரணமும் விளைவுமாக அமைகிறது. செயலின் செய்கையாளராகவும் விளைவுகளின் வாரிசாகவும் அமைவது. சொர்க்கம் நரகம் எல்லாம் இதிலேதான் உளது. நல்லொழுக்கம், அழகினையும் அகமகிழ்வினையும் அருளுகிறது. தீயவொழுக்கமோ துன்பினையும் அவலட்சணமும் அளிக்கிறது. ‘ எப்படி நீ ஒழுக்கத்தை உருவாக்குகிருயோ அப்படியே உன் வாழ்வு அமைந்து விடுகிறது ’ என்கிருர் ஓர் அறிஞன்.

ஒழுக்கம் என்பது பிறப்பிலே அமைவதன்று, பிறந்து வருவதுமன்று, சிறப்பாக அமைத்துக்கொள்ளப்பெறுவது. உண்டாவதில்லை, உருவாக்கப்படுவது. அது ‘ரெடிமேட்’ பொருளன்று. நாளாவட்டத்தில் சிறுகச்சிறுக உண்டாக்கப்

பெறுவது. இஃதோர் உயரியசெல்வம், செல்வத்துட் செல்வம்; வறுமையாளரின் வளமை. எல்லோருடைய இனியமூலதனமும் இதுவேஎனலாம். சிறந்தசொத்து என எவரேனும் தன்சந்ததிக்கு விட்டுச்செல்வதாக இருப்பின் அது நல்லொழுக்கமே. பின் தலை முறைக்கென ஏதேனும் கொடையென இட்டுச்செல்ல வேண்டுமெனில் அது உயரிய ஒழுக்கமாகத்தான் இருக்க முடியும். தக்காரின் எச்சமாக அமையும் தகுதியதும் இதுவே. ஏனெனில் இந்த வாழ்வில் எத்துணைதான் ஏற்றமுற்றாலும் எவ்வளவோ படைத்திட்டாலும் இறுதியில் உறுதிபெறுவது – எஞ்சநிற்பது ஒழுக்கம்சான்றவர் என்ற நற்பெயரே. இந்த உலகினை விட்டுச் செல்லும்போது – கூடுவிட்டிங்கு ஆவிதான் போகும்போது யாரும் எடுத்துச்செல்வது ஏதுமில்லை; விடுத்துச் செல்வது புகழே – நல்லவன் என்றபெயரே நீடு நிற்கும் – நிலவும், உலவும். எனவே எதனை இழந்தாலும் இழக்கலாம்; ஒழுக்கத்தை மட்டும் ஒருவரும் ஒருபோதும் இழத்தலாகாது என்கிறார் எமர்சன்.

புகழ் என்பது ஆவியாகிவிடும், பேர்என்பது ஒருவாய்ப்பு, பணம் என்பது தாற்காலிகம், எல்லாம் மறையும் மாயும் மாளும் புகழ் புகைந்து போகலாம்; செல்வம் செல்வோம் செல்வோம் என்று சென்றிடலாம், செல்வாக்கும் செல்லாக்காசாகலாம் ஒருநாள். ஆனால் ஒன்றேஒன்றுமட்டும் என்றும் நின்று நிலவக் கூடியது; அதுதான் ஒழுக்கம் – பண்பு. குணமே குன்றா ஆற்றல், குறையாச் செல்வாக்கு, குறைவற்றசெல்வம், அது நண்பர்களை உண்டாக்கும், நாணயத்தை உருவாக்கும்; நற்றுணையை ஏற்படுத்தும். புகழ், மகிழ்வு, சொத்து அனைத்தும் எளிதே இனிதே வரும் வாயிலைத் திறந்துவைக்கும்.

உடைமையிலெல்லாம் உன்னதமானது; அது மனிதனின் மதிப்பு, மற்றவரின் கணிப்பு. பிறர் நெஞ்சமாம் வங்கியில் நல்லவன் – பண்பாளன் என்ற மூலதனத்தைமுதலீடுசெய்யின், லோகாயுதமுறையில் – உலகியற் பொருளால் செல்வந்தராகா விடினும், பிறர்மதிப்பிலும் துதிப்பிலும் – பேரிலும் புகழிலும் உயர்ந்தோங்கலாம். மதி நுட்பத்தைவிட மேதமையைக்காட்டி லும் மிகஉயர்ந்தது ஒழுக்கம். தனிமனிதனின் ஒழுக்கத்தையே சமுதாயம் விழைகிறது – வரவேற்கிறது – எதிர்பார்க்கிறது.

மாந்தனின் மிகுதேவை படிப்பு அல்ல, பண்பே. அதுவே அவனது சிறந்த கவசம் – சீரிய தற்காப்பு. அதனாற்றான் அண்ணல் காந்தி, 'படிப்பின் அடிப்படை பண்பினைப் புடம் போடுவதாக அமைவேணும் - ஒழுக்கத்தை தூய்மைப்படுத்த வேண்டும் என்கிறார்.

(தொடரும்)

தெய்வச் சேக்கிழார்

வித்துவான். திரு. தா. குருசாமி தேசிகர்

தெய்வச்சேக்கிழார் தென்றமிழ்ப்பயனாய்த் தோன்றிய பெரியார். மக்கள் நிலையில் வாழ்ந்து வானுறையுந் தெய்வத்துள் ஒருவராக வாழ்பவர். சேக்கிழார் பெருமான் தொண்டை நாட்டுக் குன்றத்தூரில் வேளாண் குடியிற் பிறந்தவர். வேளாண்குடியின் பலவகைப்பிரிவில் சேக்கிழார் குடியில்பிறந்தவர் ஆதலால் இவர் இயற்பெயராகிய அருண்மொழித் தேவர் என்றபெயர் சேக்கிழார் எனவே விளங்கலாயிற்று. சேக்கிழார் பெருமான் வேளாண்குடி செய்த தவப்பயனால் அவதரித்தார்.

அரசுத்தொழில் :

சோழன் சேக்கிழார்க்கு அமைச்சர்குழுவின் தலைமைப் பதவி வழங்கினான். உத்தமச்சோழப்பல்லவன் என்ற பட்டமும் வழங்கினான். பழையாறையிலும் தஞ்சையிலும் அமைச்சுப்பணி செய்துகொண்டு திருநாகேச்சுரத்து நித்தன்பால் நேசம் மிக்கவராய் விளங்கினர். அரசுப்பணியின் வருவாய்க்கொண்டு, தமது சொந்த ஊரான குன்றத்தூரில் மடவளாகம் தோற்றுவித்தார்.

திருக்கோயில் திருப்பணி :

தமது பிறந்த தலத்தில் செம்பியர்கோன் திருநாகேச்சுரத் தலம்போல் திருப்பேர்சாத்தி விழாமுதலியனகண்டு திருகோயில் திருப்பணி இயற்றி சேக்கிழார் திருத்தொண்டு செய்துவந்தார். இவ்ருடைய திருத்தொண்டின் ஒளிவழியே வளவர்கோன் செங்கோல் இமசேது பரியந்தம் இனிது நிகழ்ந்தது.

சமணர் பொய்நூல் :

'மந்திரிக்கழகு வரும்பொருள் உரைத்தல்' என்றபழமொழிப் படிச் சேக்கிழார் பணிசெய்த அருஞ்செயல் குறிக்கத்தக்கவரலா ரும். வளவர்கோனாகிய சோழன் செந்தமிழ்ச் சிந்தாமணியில் மனம் போக்கிக்கிடந்த மன்னனை, மந்திரியார் அணுகி 'இந்நூல் பொய்மை மலிந்தது; மறுமைக்கும் பயன்படாது; இம்மைக்கும் பயன்படாது' என்று தெளிவு படுத்தினர்.

தெளிவும் மெய்மையும் :

நெற்குற்ருது உமிக்குத்திக் கைசலிப்பார்போலவும், கறவை மாடுவிட்டு மலடு கறந்து எய்த்ததுபோலவும், குளிர்பூஞ்சோலை விட்டுக் குழிவீழ்ந்து வாடுவதுபோலவும், கரும்பிருக்க இரும்பு கடித்து எய்ப்பது போலவும், விளக்கிருக்க மின்மினித்தீக்காய்வது போலவும் சமண்நூலில் மனம்பற்றிய வளவர்கோனுக்குச் சிவகதை ஒன்றே தெளிவும் மெய்மையும் காட்டுவது என்று சேக்கிழார் வரும்பொருளும் – அரும்பொருளும் காட்டினர்.

செம்பியர்கோன் கேட்க கிளத்தல் :

சீவகசிந்தாமணி போல் அல்லாமல், உயர்ந்த கதை என்று கூறப்படுகின்ற சிவகதை வரலாற்றைச் சாற்றவேண்டிச் செம்பியர்கோன் கேட்க, சேக்கிழார் சாற்றுகின்ருர். நாட்டிற்கு விளக்கமுடன் உண்மையினை உரைக்கவேண்டும் என்ற மன்னன் ஆணை நிறைவேற்றப்படுகின்றது.

திருத்தொண்டர் புராணம் :

திருத்தொண்டர்புராணத்தைத் தில்லையில்இருந்து இயற்றும் படிச் சேக்கிழார்க்கு மன்னர்வரிசைகள் நல்கி அனுப்பிவைத்தார். தில்லையம்பலவன் திருவருளை வேண்டி வணங்கி எழுந்தபோது 'தில்லைவாழந்தணர்' என்று, அடியெடுத்துக் கொடுத்தசெய்கை போலவே 'உலகெலாம்' என்று அடியெடுத்துக்கொடுத்தார் அம்பலவாணர். அதனை அடியாகவும் முடியாகவும் கொண்டு திருத்தொண்டர் புராணத்தை அருளிச்செய்தார்.

பெரியபுராணத்தின் பெருமை :

கருங்கடலைக்கூடக் கையால் நீந்திக் கரையேறிவிடலாம்; நொய்மணலை எண்ணி அளவிட்டுவிடலாம்; அலைகளை ஒன்றிரண்டென எண்ணி இலக்கம் வகுத்திடலாம்; கடலின் மீனை அளவிடலாம்; வானத்துத்தாரைகளை அளவிட்டுஎண்ணி விடலாம்; ஆனல் சங்கரன்தாள் தமது சிரத்தில் கொண்டுள்ள திருத்தொண்டர்புராணத்தை அளவிடுதல் சேக்கிழார்க்குத்தான் எளிது; தேவர்க்கும் அரிது என்று உமாபதிசிவாசாரியார் கூறுகின்ருர்.

மன்னன்செய்த சிறப்பு :

பெரியபுராணநூல் செய்யப்படும் போதெல்லாம் எவ்வளவு ஆயிற்று என்றுகேட்டு நாடோறும்போற்றிமகிழ்ந்து வரிசைகள் நல்கி, அம்பலவாணர்சந்நிதியில் அரசன் வேண்டிய சிறப்பீந்

தான். அறுகாற்பீடம் அமைத்துப் பசும்பட்டு விரித்து, மலர் தூவிச் சேக்கிழார் அருளிய பெரியபுராணத் திருமுறை ஏடுகள் எழுந்தருளச்செய்யப்பட்டன.

பொருள் அடைவு கூறல் :

மன்னன் வேண்டுகோளின்படி அம்பலவாணன் முன்பு, இப்புராண இலக்கியத்தின் பொருளையும் அடைவையும் ஒரு சித்திரை ஆதிரைநாள்தொடங்கிச் சேக்கிழார் மற்றொருசித்திரை ஆதிரை நாளில்விரிவுரையாற்றிப்புராணமுடிபுகாட்டினர், மடாதிபதிகளும் மாண்புறு அமைச்சர்களும் செந்தமிழ் வல்லவரும் கேட்டு இன்புற்றனர். 'தொண்டர்சீர் பரவுவார்' எனப்போற்றி. தெய்வச் சேக்கிழாரையும் தெய்வமாக் கதையையும் யானை மீதேற்றி, மன்னன் தன் இணைக்கரங்கள் இரண்டாலும் கவரிவீசி, உலாவரச்செய்து வணங்கி, 'இதுவன்றோ நான்செய்த தவப் பயன்' என்று பரவசமுற்றான்.

தெய்வச்சேக்கிழார் :

செந்தமிழ்வழக்கின் துறை மேன்மை செப்பிய சேக்கிழார், அமைச்சராகிப் புகழ்பெற்றார். ஆலயங் கட்டி அரும்புகழ் பெற்றார். சிவகதை செப்பிய உரத்தால் சோழனால் வணங்கப் பெற்றார். உமாபதிசிவம் தமது சேக்கிழார் புராணத்தில் – சேவையர்காவலரை வடநூல் புகழும் வால்மீகியையும், வேத வியாசரையும் ஒப்பாகக் கூறமுடியாது என்று போற்றுகின்றார்.

திருமுறைவகுத்தல் :

பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை என வகுக்கப் பட்டு, தேவார திருவாசகமாகிய திருநெறித் தமிழ்களோடு ஒப்பாகக் கருதப்பட்டது. சேக்கிழார் பெருமான் பின்பு தில்லை நகர் தன்னிலேயே தங்கி,

" பண்டு மூவர்பதிகத்து வந்தவறுபத்துமூவர்
கதைதனை உணர்ந்து
அண்ட வாணரடியார்கள் தம்முடன்
அருந்தவந்தனில் இருந்துபின்
இண்டை வைத்த சடையம்பலத்தவர்
எடுத்தபாதநிழல் எய்தினர். "

என்று கூறுவது கொண்டு அறியலாம்.

பெரியபுராணம் வாழ்வு நூல் :

அளவில்லாத அடியார் பெருமைகூறும்இந்நூலை அன்போடு கற்றுத் தெளிந்தாலன்றிச் சிவாலயங்கள் எங்கும் முறையே அவர்களுக்குப் பிரதிட்டை, பூசை, திருவிழாக்கள் செய்தற் கண்ணும், அவைகளைச்சேவித்தற்கண்ணும் ஊக்கமும்அன்பும் நிகழாது. ஆதலால் தமிழர்கள் யாவரும் ஒருதலையாகக் கற்று உணரவேண்டிய வாழ்வுநூல் இது. இந்நூலை ஒவ்வொரு சிவாலயத்திலும் படிக்கச்சொல்லி தக்கவர் மூலமாகப் பொருளை உணர்ந்து அருள்நெறி போற்றுவாராக.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிபு"

என்ற குறள்நெறி நினைந்து சேக்கிழாரின் திருவடிபரவுவோமாக.

விநாயகர் நாமாவளி இசைப்பாடல்

திருமுறைக்கலாநிதி,

வேலூர், திரு. க. சொக்கலிங்க ஓதுவார்.

இராகம் – அம்ஸத்வனி] [தாளம் – ஆதி

ஐங்கரன் கணேசன் அடிபணிவோம்
அவனியில் ஆனந்த வாழ்வடைவோம் (ஐங்கரன்)

1. மங்கள வடிவன் மாதேவன்
மதியணி சடையன் மைந்தனவன் (ஐங்கரன்)

2. அறுகணிந்தவன் ஆனைமுகன்
அடிபணிபவர் அருகில்வருவன் (ஐங்கரன்)

3. குற்றம் நீக்குவன் குணங்கொடுப்பன்
குட்டிக் கொள்பவர் குறைதீர்ப்பன் (ஐங்கரன்)

4. மறைப்பொரு ளானவன் மதமுகத்தன்
மலரடி நினைவார் மனத்தகத்தன் (ஐங்கரன்)

5. நித்தம் நினைவார் சித்தம் உறைபவன்
நினைத்த செயல் முடித்திடும் நிமலன் (ஐங்கரன்)

6. கஜமுகத்தன் சிவகாமிமகன்
கைதொழுவார் கவலைகளைபவன் (ஐங்கரன்)

7. மூவுலகும் தொழும் மூர்த்தியவன்
முத்தமிழைத்தரும் முதல்வனவன் (ஐங்கரன்)

8. கருத்திலுறையும் கற்பகக்களிறன்
கந்தனுக்கண்ணன் கலைத்தலைவன் (ஐங்கரன்)

9. ஓர் பிரணவத்தின் உருவனவன்
உளம் உருகுவார்தம் உளம் உறைவன் (ஐங்கரன்)

10. வஞ்சமிலா நெஞ்சில் வசித்திடுவன்
வாழ்த்துவார்க் கருளும் வள்ளலவன் (ஐங்கரன்)

11. ஒற்றைக் கொம்பன் அவன் உமைபாலன்
உகப்பவர்க் குரியன் உச்சியில் வைப்பன் (ஐங்கரன்)

12. கயமுகனை அழித்த கடவுளவன்
கருணாகரன் கனிவார்க்கினியன் (ஐங்கரன்)

13. சித்தி மணாளன் ஜெயந்தருவன்
சிந்திப் பவர்க்கருள் பொழிவன் (ஐங்கரன்)

14. ஞானவடிவன் ஞானத்தலைவன்
நாளும் நன்மைதரும் விநாயகன். (ஐங்கரன்)

செய்திகள்

ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு 22—7—82 வியாழக்கிழமை காலை, திருத்தெங்கூர் அருள்மிகு வெள்ளிமலை நாதர் திருக்கோயிலிலும், மாலை திருநெல்லிக்கா அருள்மிகு நெல்லிவன நாதர் திருக்கோயிலும் மிகச்சிறப்பாக நடைபெற்றது. சுவாமி, அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அவ்வத் தலங்களில் திருப் பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றது. திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., 'வழிபாடு' என்னும் பொருளிலும் திரு. சொ. முத்தையன், எம். ஏ., 'பிறவிப் பயன்' என்னும் பொருளிலும் திரு. சுந்தரராஜன் எம். ஏ., 'பக்தி' என்னும் பொருளிலும் ஸ்ரீ நெல்லையப்ப சுவாமிகள் 'கூற்றுவநாயனர்' என்னும் பொருளிலும் சொற்பொழிவு ஆற்றினர். அச்சிடப்பெற்ற தலத்திருப் பதிக நூல் வழிபாட்டிற் கலந்து கொண்ட அன்பர்கட்கு வழங்கப் பெற்றது. அன்பர் பலர் வழிபாட்டிற் கலந்து கொண்டு பயனுற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கில மாதத் திலும் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று காலை சரியாக 10 – மணி யளவில், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. 1—8—82 அன்று 15ஆவது வழிபாட்டுக் கூட்டம் நிகழ்வுற்றது. காலை 10 மணியளவில் தொடங்கிக் கூட்டுப் பிரார்த்தனையை அடுத்துத் தருமையாதீன வேத சிவாகமபாடசாலை ஆசிரியர் திரு. P. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் 'புராணங்கள்' என்னும் தலைப்பில் பதினெண் புராணங்கள் கூறும் கருத்துக்களை வகைப்படுத்திக் கூறி புராணம் என்னும் சொற்பொருள் பற்றி எடுத்து விளக்கினர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் புராணம் பற்றிய கருததுக்களின் விளக்கமாகத் திருமுறைகளினின்றும்

பலமேற்கோள்களை எடுத்துக் காட்டி முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புது மைக்கும் பேர்த்துமப் பெற்றியனாய் விளங்கும் புராணனும் இறைவன் தன்மையை அனைவரும் நன்கு புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கி உபதேசித் தருளினார்கள். மாயூரம் நகரப் பெருமக்களும் சைவ மெய்யன்பர்களும் கலந்து கொண்டு பயனுற்றனர். அடுத்த பிரார்த்தனைக் கூட்டம் 5—9—'82 அன்று நிகழ இருக்கிறது. அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெறுவார்களாக.

மகாகயிலாயக் காட்சி

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் தரிசித்த மகா கயிலாயக் காட்சியின் இருபத்து மூன்றாவது ஆண்டு விழா ஸ்ரீ அப்பர் சுவாமிகள் கயிலை கண்ட நாளாகிய ஆடி அமாவாசையன்று (20—7—1982 அன்று) மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலையிலும் மாலையிலும் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூசைமடத்தில் திருக் கயிலாயத் திருவுருவப் படத்திற்கு வழிபாடு, ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களால் நிகழ்த்தப் பெற்றது. பண்ணிசை வாணர்களால் திருமுறைப் பாராயணம் அகண்ட பாராயண மாக நிகழ்த்தப்பெற்றது. மாலை 6 மணி அளவில் பூசைமடத்தில் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., 'அப்பர் தேவாரத்தில் கயிலைக் காட்சி' பற்றியும் வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., 'சுந்தரர் தேவாரத்தில் கயிலைக் காட்சி' பற்றியும் வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ., 'பெரிய புராணத்தில் கயிலைக் காட்சி' பற்றியும் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், பி. லிட்., 'திருக்கயிலாய ஞானவுலா'ப் பற்றியும் வித்துவான் திரு. மு. கோவிந்தராசனார் 'ஞானசம்பந்தர் தேவா ரத்தில் கயிலைக் காட்சி' பற்றியும் விரிவுரையாற்றினர். இரவு வெள்ளி ரதத்தில் திருக்கயிலாயத் திருவுருவப்படத் திருவீதி யுலா நடைபெற்றது. திருவீதி உலாவின்போது திருக்கயிலாய நிலையத்தில் தரிசனவழிபாடு திருமுறைப்பாராயணத்துடன் நிகழ் வுற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அடியார்கள், சைவ மெய்யன்பர்கள் புடை சூழத் திருவுலாப்போந்தருளினார்கள். அன்பர் பலர் வந்திருந்து வழிபட்டுப் பயனடைந்தனர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜைவிழா

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் சமயகுரவருள் மூன்றுமவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

குருபூஜை விழா 28—7—82 புதன்கிழமையன்று (ஆடிச்சுவாதி நாளில்) சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. காலே விசேஷ அபிஷேக ஆராதனைகளையடுத்து ஸ்ரீ சுந்தரர் அருள் வரலாற்றுத் தொடர்புடைய பெரியபுராணப் பகுதிகள் படிக்கப்பெற்றன. திருத்தொண்டத் தொகை பாராயணம் செய்யப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடு ஆற்றினார்கள். இரவு ஸ்ரீ சுந்தரர், ஸ்ரீ சேரமான் பெருமாள் நாயனார் திருவீதியுலா நிகழ்வுற்றது. திருவீதியுலாவின்போது, வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., வித்துவான் திரு. சொ. முத்தையன், எம். ஏ., வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், பி. லிட்., வித்துவான் திரு. மு. கோவிந்தராசனார் ஆகியோர் அற்புத விளக்கச் சொற்பொழிவாற்றினர். வேத பாராயணத்துடனும் திருமுறைப் பாராயணத்துடனும் திருவீதியுலாச் சிறப்பாக நடைபெற்றது.

தருமையாதீனக் கல்வி நிலையங்களின்

இலக்கிய மன்றத் தொடக்கவிழா

தருமையாதீனக் கல்வி நிலையங்களாகிய பல்கலைக்கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி, வேதசிவாகம பாடசாலை, தேவாரப் பாடசாலைகளின் இலக்கியமன்றத் தொடக்கவிழா தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாதரவில் 10—8—82 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணிக்குத் தொடங்கி நிகழ்வுற்றது. ஆதீனத்திருநெறியதெய்வத் தமிழ மன்றத்தில் நடைபெற்ற இவ்விழா அமுதமொழிக்கொண்டல் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வாரியார் அவர்கள் தம் உரையில் மாணவர்கள் பெற்றோரிடமும், ஆசிரியர்களிடமும், தெய்வத்திடமும் பக்தி கொண்டு நல்வழியில் ஒழுகவேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தி உரையாற்றினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விழாவின்போது எழுந்தருளியிருந்து உரையைச் செவிமடுத்தருளினார்கள். கல்விநிலைய மாணவ மாணவியர்களும், ஆசிரியர்களும், அன்பர்களும் விழாவிற்கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

ஆடிப்பூரவிழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்திலும், சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி

தேவஸ்தானத்திலும், திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானத்திலும், ஆடிப்பூர மகோற்சவம் நடைபெற்றது. 24—7—82 சனிக்கிழமையன்று ஆடிப்பூர நாள் விழா நடைபெற்றது. சிறப்பான முறையில் நடைபெற்ற இவ்விழாவில் அன்பர் பலர் வந்து தரிசித்து இன்புற்றனர்.

அட்டைப்பட விளக்கம்

பிரம்மா விநாயகரை வணங்காமல் உலகத்தைப் படைக்கத் தொடங்கினர். அதனல் அவர்படைத்தவை யாவும் பேயும் பிசாசுமாகவும் ஆயின. அவை மிக்க துன்பத்தைவிளைவித்தன. அதுகண்டு பிரம்மா மிகவும் அஞ்சினர். விநாயகரை வணங்காததன் விளைவு இது என்று உணர்ந்தார். விநாயகரின் ஏகாக்ஷரமந்திரத்தை ஜபித்தார். விநாயகர் அவர்முன் தோன்றி ஞானசக்தி கிரியாசக்திகளை உபாசிக்கும்படிஅருளினர். பிரம்மாவும் அவ்வாறே உபாசித்தார். அச்சக்திகளை புத்தி சித்தி என்ற பெயர்களுடன் புதல்விகளாகப் பெற்ருர். அப்புதல்விகளை விநாயகப்பெருமானுக்கு மணம்புரிவிக்க விரும்பினர். நாரதமுனிவர் விநாயகரிடம் அவ்விருவரைப்பற்றி வர்ணித்தார். பிரம்மாவின் பிரார்த்தனையையும் தெரிவித்தார் விநாயகக்கடவுளும் அதற்கு இசைந்து சித்தி புத்திகளைத் திருமணம்செய்து கொண்டார். விநாயகரை உபாசித்தால் புத்தியும் காரிய சித்தியும் ஏற்படும் என்ற தத்துவத்தை இவ்வரலாறு அறிவிக்கிறது அவ்வித சித்தி புத்திகளுடன் கூடிய சித்திபுத்தி விநாயகப்பெருமான் இவ்விதழ் அட்டையில் காட்சி தருகிருர். 22—8—82 ஞாயிறு விநாயக சதுர்த்தி வருகிறது. விநாயகரை முறையாக வழிபட்டு வேண்டிய நலங்களைப் பெறுவோமாக.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துந்துபிஸ்ரீ ஆவணிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—8—1982 முதல் 16—9—1982 முடிய)

			ரா
			சு சந்
	இராசி		சூ பு
கே		கு செ	ல/ சனி

ராகு செ			ல/ சனி
கு சூ	அம்ஸம்		சந் கே
	பு		சு

ஸ்ரீ துந்துபிஸ்ரீ ஆவணிஉ 1உ மங்களவாரம் பூசநக்ஷத்திரம் வணிசைகரணம் கூடியகாலத்தில் சூரியஉதயம் முதல் 8 நாழிகை 6 விநடிக்கு கன்னியா லக்னத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் கடகராசியிலிருந்து சிம்மராசி சங்கிரமணமாக ஆவணி மாதம்பிரவேசம் செய்தருளுகின்றார். அவர்தனது ஆட்சி பீடத்தி லிருந்து யோகத்தை இரட்சிப்பவராக விளங்குகின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணிய காலமாகும். சேனாதிபதி செவ்வாய் பகவான் ஆகிறார். அதனாலும் சங்கிரமணகால கிரகஸ்திதியாலும் லோகத்தில் செந்நிறமுள்ள பூமியில் சஸ்ய தானியப் புஷ்பம் நாற்றுவகைகள் செழுமையுற்று வளரும் அரசாங்க ஊழியர்கள், தேசங்களைக் காப்பாற்றுகின்ற படை வீரர்கள், இராஜ பக்தி உள்ளவர்களாகிக் கடமையாற்றுவார்கள். தேசங்களில் எங்கும் ஆன்றோர்களால் புண்ணிய ஸ்தலங்களில் தெய்வ புண்ணிய

காரியங்கள் லோகோபகாரப் பொதுநலத் தர்மங்கள் நடந்து கொண்டிருக்கும். தேசங்களில் ஆளுநர்களால் செங்கோல் ஆட்சி நடைபெற்றுவரும். பிரஜைகள் க்ஷேமமாக வாழ்வார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் குருமகா சந்நிதானங்கள் லோகத்திற்கு சிவாசாரம் தெய்வபக்தி, மனுநீதி ஆகிய உயர் மார்க்கங்களை எடுத்தியம்பி அருள்வார்கள். உலகெங்கும் கிளைமடங்கள் நிறுவி சீடர்கள்மூலம் சைவசமயம் பரவுவதற்கு அனுக்கிரகிப்பார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் விசேஷ பூசைகள் நடைபெற்று வரும். லோக சுபிட்சார்த்தமாக யாகவேள்விகள் தெய்வங்களுக்கு இலட்சகோடி அருச்சனைகள் நடைபெறும். பிரஜைகள் ஈஸ்வர பக்தியுடையவர்களாகி உயர்கிரியைகள் பல புரிந்து க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – $\frac{1}{4}$

(சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். தனாதி சௌகரியங்களில் மேலான ஸ்திதியை ஏற்படுத்திவரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் ஆகஸ்டு 21 தேதி ஆனால் உயர்ந்த ஸ்திதியையளிக்கும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு ஏற்படும். பிரபலம் தரும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய நன்மைகள் பல ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஆகஸ்டு 21, 22, 23, 24, 31 செப்டம்பர் 1, 2, 3, 7, 8, 11, 12 தேதிகளில் தனாதாயம், சுபசோபனம், மதிநுட்பசாதனை ஆகிய நற்பலன்கள் ஆகும். ஆகஸ்டு 26, 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ – உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

(இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வு. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் இராஜகண்யமாக பணவரவை ஏற்படுத்தும். நல்ல ஆபரணம் தரும். வீடுவாகனங்களில் நவீனம் ஏற்படும். மேலோர் பிரபலஸ்தர்களால் நன்மைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். எல்லா காரியங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றுதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஆகஸ்டு 17, 18, 24, 25, 26, 27, 28, செப்டம்பர் 2, 3, 4, 5, 6, 9, 10, 13, 14, 15 தேதிகளில் தனாதாயாதி நற்பலன் யளிக்கும். 29, 30 தேதிகளில் மத்திமபலன் தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

(கா. கி. - கு. க. ஸ. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பணவருமானம் வரும். இல்லத்தில் சுப நிகழ்ச்சி ஏற்படும். புத்திர பிராப்தி ஒன்று ஏற்படும். விததியா வியாபாராதிகளில் கலைத்துறையில் ஆகஸ்டு 26 வுக்கு மேல் நற்பல பிராப்தியையளிக்கும். தாம்பத்திய வாழ்க்கையில்சுமூகம் நிலவும். ஆகஸ்டு 19, 20, 26, 27, 28, 29, 30 செப்டம்பர் 2, 4, 5, 6, 7. 8, 11, 12, 16 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஆகஸ்டு 31 செப்டம்பர் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபபலனக நடக்கும். தனமும் நல்ல சௌகரியமும் தரும். வித்துவத்துவம் புத்திசாதுரிய பேச்சு வார்த்தைகளில் நல்ல கௌரவம் தரும். வாகனசுகம் திருப்தி யளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். செப்டம்பர் 7 வுக்கு பூமியில் இயந்திர வாகனங்களில் நல்லன ஏற்படும். ஆகஸ்டு 17, 18, 21, 22, 23, 28, 29, 30, 31 செப்டம்பர் 1, 7, 8, 9, 10, 13, 14. 15 தேதிகளில் தனதாயம்தரும். நல்விஷய உரையாடல் சம்பவிக்கும். காரிய ஜெயம் ஏற்படும். செப்டம்பர் 2, 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலனக நடக்கும். குடும்பாபி விருத்தியில் தன விருத்தியை ஏற்படுத்திவரும். ஆகஸ்டு 22 தேதி அளவில் ஒப்பந்தங்களில் இருந்த பணம் வரும். சுப விசேஷங்களை நடத்தும். வீடு மனைகளில் திருத்த அலுவல்கள் நடக்கும். புத்திரர்களின் கல்வி உத்தியோகங்களில் உயர்வை ஏற்படுத்தும். தாம்பத்தியவாழ்வில் சுமூகம் நிலவும். ஆகஸ்டு 19, 20 24, 25, 31 செப்டம்பர் 1, 2, 3, 4, 9, 10, 11, 12, 15, 16 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை யளிக்கும். செப்டம்பர் 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½
(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் வந்து கொண்டிருக்கும். எல்லா காரியங்களும் நெருக்கடி நிலைமையில் செலவுடன் பூர்த்தியடையும். இல்லத்தில் சுப விசேஷங்களை நடத்தி வைக்கும் சனிசகஸ்ரநாம அருச்சனை செய்தல் நலம். தேகத்தில் பித்தாதிக்கநலிவு குணமாகும் ஆகஸ்டு 17, 18, 21, 22, 23, 26, 27, 28 செப்டம்பர் 2, 3, 4, 5, 6, 11, 12, 13, 14, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். செப்டம்பர் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி - விசாகம் ¾
(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதகங்மளும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானம் 3 விதங்களில் வந்துசேரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் அரசாங்க நன்மைகளை உண்டுபண்ணும். செப்டம்பர் 4 தேதிக்குப்பிறகு நல்ல புத்திர பிராப்தி ஒன்று ஏற்படும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியாக நடந்துவரும். ஆகஸ்டு 17, 18, 19, 20, 24, 25, 29, 30 செப்டம்பர் 5, 6, 7, 8, 14, 15, 16 தேதிகளில் காரிய ஜெயம் புகழ் மேலிடுதல் மேலிடத்திய நன்மைகள் ஏற்படச் செய்யும். செப்டம்பர் 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.
(தோ. - ந. நி. நு. நே. – நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபி விருத்தியில் தன வருமானங்கள் வந்துக் கொண்டிருக்கும். ஆகஸ்டு 21 தேதிக்குமேல் சகோதரருக்கு ஓர் நன்மை ஏற்படும். வீடு வாகனங்களில் சீர்திருத்தம் ஏற்படும். உத்தியோகத்தில் அரசாங்கத்தில் நன்மதிப்புதரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆகஸ்டு 19, 20, 21, 22, 23, 26, 27, 28, 31 செப்டம்பர் 1 7, 8, 9, 10, 16 தேதிகளில் காரியஜெயம், தனுதாயம் ஆகிய நற்பலன் ஏற்படும். செப்டம்பர் 11, 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

9. தனுசு :- மூலம் – பூராடம் – உத்திராடம் ¼
(யே. யோ பா. பி. - பு. த. ப. ட. – பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். குடும்பாபி விருத்தியில் நல்ல பண வருமானங்களை ஏற்படுத்தி வரும். சகோதரர்

விசுவாசம் ஒத்துழைப்புபலம் தரும். உத்தியோகத்தில் உயர்வு தரும். ஒப்பந்த லேவாதேவிகளில் புதியன ஏற்படும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆகஸ்டு 22, 23, 24, 25, 28, 29, 30 செப்டம்பர் 2, 3, 4, 9, 10, 11, 12 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஆகஸ்டு 17, 18 செப்டம்பர் 13, 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ – திருவோணம் - அவிட்டம் ½
(போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானம் சீராக இருப்பினும் எல்லா காரியங்களும் கெடியாக நடந்து கொண்டிருக்கும். செப்டம்பர் 3உ முதல் காண்டராக்ட் ஒப்பந்தங்களில் உத்தியோகத்தில் நல்லன ஏற்பட்டுவரும். பெண்மகவு ஒன்று ஏற்படும். தாம் பத்திய வாழ்வில் சுமுகம் ஏற்படும். ஆகஸ்டு 17, 18, 24, 25, 26, 27, 28, 31 செப்டம்பர் 1, 5, 6, 11, 12, 13, 14 தேதிகளில் தனுதா யாதி நற்பலன்களை யளிக்கும். ஆகஸ்டு 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾
(கு. கே, – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமாளம் நல்ல விதத்தில் வந்துசேரும். சகோதரருக்கு உயர்வுதரும். வீடுவாகன பிராப்தியில் மாறுதல் சம்பவிக்கும். ஆகஸ்டு 24 தேதிக்குமேல் இல்லத்தில் சுப விசேஷம் ஒன்று நடக்கும். புத்திரபிராப்தி ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஆகஸ்டு 17, 18. 19, 20, 27, 28, 29, 30. செப்டம்பர் 2. 3, 4, 7, 8, 13, 14, 15 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஆகஸ்டு 21, 22, 23 தேதிகள் சந்திராஷ் டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.
(தி. – து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானங்கள் மதிப்பாக வந்துக் கொண்டிருக்கும். சகோ தரருக்கு சுபம்தரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் அரசாங்க நன்மதிப்பை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். ஆகஸ்டு 19, 20, 21, 22, 23, 29. 30 செப்டம்பர் 1, 2, 5. 6, 7, 10 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஆகஸ்டு 23, 24 தேதிகள் சந்திராஷ் டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

ஆவணிமாதச் சிறப்பு நாட்கள்

17—8—82 செவ்வாய், திருவையாறு தீர்த்தம், விஷ்ணுபதி புண்ணிய காலம். சிம்மரவி 8-9.

18—8—82 புதன், அமாவாசை. ஆயில்யவிழா, தர்ப்பசங்கிரஹணம்.

20—8—82 வெள்ளி, தருமையாதீனம் 5 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

21—8—82 சனி. சந்தான ஆசிரியர் ஸ்ரீ மறைஞானசம்பந்தர் -

22—8—82 ஞாயிறு. விநாயகசதுர்த்தி, ஸாமோபாகர்மா [குருபூஜை.

23—8—82 திங்கள், ஆவணிமூல உற்சவாரம்பம், ரிஷிபஞ்சமி.

26—8—82 வியாழன், தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கும், ஸ்ரீ தருமபுரீசுவரசுவாமிக்கும் சம்வத்ஸராபிஷேகம்.

27—8—82 வெள்ளி, தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா முதல்நாள். ஆவணி உச்ச ஆரம்பம் 42-29. வேளூர் கேதார விரதாரம்பம்.

28—8—82 சனி, தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா இரண்டாம்நாள்.

29—8—82 ஞாயிறு, ஆவணிமூலம், தருமையாதீனம் பூஜை மடத்தில் விசேஷ அபிஷேக ஆராதனை. மாலை பட்டமளிப்பு விழா, தருமையாதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழா நிறைவுநாள், வேளூரில் ஸ்ரீ பஞ்சமூர்த்திகள் அபிஷேகம். புறப்பாடு, திருவையாறு சூரியபுஷ்கரணியில் தீர்த்தம், ஷை புஷ்கரணியில் தெப்பம்.

30—8—82 திங்கள், ஆவணி உச்ச நிவிருத்தி 59-50 திருவண்ணமலை ஆதீனம் குன்றக்குடிமடாலய குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீதெய்வ சிகாமணி அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் -

31—8—82 செவ்வாய், பிரதோஷம். [குருபூஜை.

1—9—82 புதன், ஆவணிமூல உற்சவ பூர்த்தி, ஸ்ரீ நடராஜமூர்த்தி அபிஷேகம், ஓணம்பண்டிகை.

3—9—82 வெள்ளி, பௌர்ணமி விரத பூசை, மாதபூஜையில் -

4—9—82 சனி, மஹாளயபக்ஷாரம்பம். [சர்க்கரை அபிஷேகம்.

6—9—82 திங்கள், திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேசுவரசுவாமி -

8—9—82 புதன், மகாபரணி. [சம்வத்ஸராபிஷேகம்.

9—9—82 வியாழன், வேளூர்க் கிருத்திகை, தருமை ஸ்ரீ சண்முகர் கிருத்திகை அபிஷேகம், விரதம்.

10—9—82 வெள்ளி. வைகநஸ ஸ்ரீஜயந்தி, மத்யாஷ்டமி, காளாஷ்டமி.

11—9—82 சனி, மயிலாடுதுறை தமரக்கட்டளை ஸ்ரீசுப்பிரமணியசுவாமி சம்வத்ஸராபிஷேகம். தருமையாதீனம் 14 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கந்தப்பதேசிக சுவாமிகள் குருபூஜை.

12—9—82 ஞாயிறு, வியதீபாதம்.

13—9—82 திங்கள், திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவர சுவாமி சம்வத்ஸராபிஷேகம். தருமையாதீனம் 13 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

14—9—82 செவ்வாய், திருக்கடவூர் ஸ்ரீ முனீசுவரபூஜை. ஸன்யஸ்த மஹாளயம்.

15—9—82 புதன், பிரதோஷம், மாதசிவராத்திரி. ஆயில்யவிழா.

16—9—82 வியாழன், வேளூர் கேதாரவிரத பூர்த்தி. தருமபுர ஆதீன மடாலயத்தில்கேதாரவிரதபூஜை போதாயன அமாவாசை. சஸ்திரஹத பிதுரு திதி.

Printed & Published by V. Ramaiah Pillai, Managar, Dharmapuram at the Gnanasambandam Press Dharmapuram, Mayuram. 10-8-82